# திருப்பருத்திக்குன்றம்

பதிப்பாசிரியர்
முனைவர். சீ. வசந்தி, எம்.ஏ., எம்.பில், பிஎச்.டி.,
ஆணையர் (பொறுப்பு)

ஆசிரியர்
பொ. கோ. லோகநாதன்

வெளியீடு
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008.
2012 திருவள்ளுவர் ஆண்டு 2043

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Tiruparuttikunram |
| Editor | : | Commissioner |
| Copyright | : | T.N. State Dept. of Archaeology |
| Subject | : | History |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No | : | 250 |
| No. of Copies | : | 500 |
| No. of Pages | : | 90 |
| Type Point | : | 11pt |
| Paper used | : | 80 GSM Maplitho |
| Price | : | Rs. 20.00 |
| Printer & Publisher | : | State Dept. of Archaeology<br>Tamil Valarchi Valaagam<br>Halls Road, Egmore<br>Chennai - 600 008. |



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
நூல் சேர்க்கை
எண்
சென்னை - 600 008

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,
ஆணையர் (பொறுப்பு)

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008.

நாள் : 05 - 07 - 2012.

# பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் மூலம் தொல்லியல், தமிழ், வரலாறு மற்றும் வடமொழி ஆகியவற்றில் முதுகலைப் பட்டம் பயின்ற மாணவர்களுக்கு ஓராண்டு முதுகலைப் பட்டயப் பயிற்சி உதவித்தொகையுடன் வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் தொல்லியல், கல்வெட்டியல், கலை, கட்டடக்கலை, வரலாறு, நாணயவியல் ஆகியவற்றில் வகுப்புகளும், களப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. 2009-2010 - ஆம் ஆண்டு வரை 200 மாணவர்கள் பட்டயப் பயிற்சி பெற்றுள்ளனர். இப்பயிற்சியின் இறுதியில் மாணவர்கள் ஒரு கோயிலினை ஆய்வு செய்து முழுமையாக ஆய்வு நூல் சமர்ப்பிக்கின்றனர். இவ்வாய்வேட்டினை ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முதல் நான்கு நூல்கள் வரை நூலாக இத்துறை வெளியிடுகிறது. தற்போது 23 மாணவர் ஆய்வேடுகள் இத்துறையால் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. இந்நூல் 24 - ஆவது மாணவர் ஆய்வேடாக வெளிவருகின்றது.

2003-2004 - ஆம் ஆண்டு இக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் பயின்ற மாணவரான திரு. பொ. கோ. லோகநாதன் அவர்கள் சமர்ப்பித்த திருப்பருத்திக்குன்றம் என்ற ஆய்வேடு 2010-2011 - ஆம் ஆண்டு பகுதி - II

திட்டத்தின் கீழ் நூலாக வெளியிடப்படுகிறது. தமது ஆய்வேட்டில் ஆசிரியர் கல்வெட்டுகளிலிருந்து பல்வேறு செய்திகளைச் சான்றுகளுடன் சிறப்பாக விவரித்துள்ளார்.

இந்நூலாசிரியர் திரு. பொ. கோ. லோகநாதன் அவர்களுக்கும், இந்நூல் சிறப்புற வெளிவருவதற்கு மேலும் பல தகவல்களை அளித்து உதவிய முனைவர். ர. பூங்குன்றன் மற்றும் திரு. ஜெகதீசன் அவர்களுக்கும், இந்நூலின் பதிப்புப் பணியினை செவ்வனே மேற்கொண்ட பதிவு அலுவலர் திரு. கி. சு. சம்பத் அவர்களுக்கும், கல்வெட்டாய்வாளர் திரு. இரா. சிவானந்தம் அவர்களுக்கும், மண்டல உதவி இயக்குநர் திரு. வெ. இராமமூர்த்தி அவர்களுக்கும், இந்நூல் வெளியிட கணினி தட்டச்சு, அட்டை வடிவமைப்பு மற்றும் அச்சுப் பணி மேற்கொண்ட திருமதி. கோ. கீதா, திருமதி. பா. வசந்தா, திருமதி. கு. கோகிலா, திருமதி. சு. பத்மாவதி மற்றும் அனைத்து அச்சுப்பிரிவினருக்கும் எனது உளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

இந்நூலை வெளியிட நிதியுதவி அளித்திட்ட தமிழ்நாடு அரசுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக திருக்கோயில்களின் வரலாற்றை குறிப்பாக சமணத் திருத்தலமான திருப்பருத்திக்குன்றத்தின் வரலாற்றினை ஆய்வாளர்கள், கல்லூரி, பள்ளி மாணவர்கள் மற்றும் அனைவரும் அறிந்துகொள்ள இந்நூல் துணைபுரியும் என எண்ணுகிறேன்.

தி. சுசுக்தி
ஆணையர் (பொ) 5/7/12

# பொருளடக்கம்


பதிப்புரை

1. காஞ்சிபுரம் மாவட்டம் 1
2. அரசியல் பின்னணி 7
3. திருப்பருத்திக்குன்றம் 23
4. ஊர் அமைப்பு 25
5. சந்திரபிரபா கோயில் 30
6. மகாவீரர் (எ) வர்த்தமானர் கோயில் 32
7. குரா மரம் 34
8. கல்வெட்டுச் செய்திகள் 35
9. ஓவியங்கள் 41
10. கட்டடக்கலை 47
11. திரைலோக்கியநாதர் கோயில் 48
12. திரிகூடபஸ்தி 50
13. கல்விப் பணி 52
14. சமுதாயப் பணி 56
15. கோயிற் சிற்பங்கள் 57
16. சமண (ஜைன) அறவோர்கள் இயற்றியருளிய தமிழ் நூல்கள் 60
17. தீர்த்தங்கரர்கள் 65
18. முடிவுரை 67
19. பார்வை நூல்கள் 68
20. பிற்சேர்க்கை - I 70
21. பிற்சேர்க்கை - II 72
22. விளக்க உரை 74
23. நிழற்படங்கள் 75

# காஞ்சிபுரம் மாவட்டம்

## நிலவியல் அமைப்பு

சென்னை மாவட்டத்திற்கு தெற்கிலும், விழுப்புரம் மாவட்டத்திற்கு வடக்கிலும், மேற்கில் வேலூர் மாவட்டத்தையும், கிழக்கில் வங்காளவிரிகுடாக் கடலையும் எல்லையாகக் கொண்டுள்ள காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வடமேற்கில் செங்கை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட திருவள்ளூர் மாவட்டமும் அமைந்துள்ளது. தென்கிழக்கே பாண்டிச்சேரி கடலோரப்பகுதியும் இடம் பெற்றுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் 79° 20' மேற்கில் 80° 45' கிழக்கு தீர்க்கரேகை மற்றும் 12° 15' - 12° 45' வடக்கு அட்சயரேகையில் அடங்கியுள்ளது. கடகரேகைக்கு உட்பட்ட இப்பகுதி வெப்பமண்டலப் பிரதேசமாக விளங்கினாலும் கிழக்கே வங்காள விரிகுடாக் கடல் இயற்கையாக அமையப் பெற்றுள்ளதால் வெப்பத்தின் தாக்கம் தொடரா அரணாக மக்களின் நிலையான வாழ்விடத்திற்கு வழி வகுத்துள்ளது. மாவட்டத்தின் கடல்மட்ட உயரம் 250 அடியாகும்.

மேலும் இப்பகுதி ஆறுகளான வேகவதி, பாலாற்றின் மேற்குக் கரையில் திருமுக்கூடலில் கலந்தும், செய்யாறு பாலாற்றுடன் பழைய சீவரம் அருகில் இணைந்தும், இம்மாவட்டம் நீர்வள ஆதாரத்திற்கு அடிப்படையாக விளங்குவதோடு, அதிக அளவில் ஏரிகளும் நிறைந்துள்ளன.

## வரலாற்றின் அடிப்படைத் தத்துவம்

வரலாறு எழுதுவோர் கல்வெட்டுச் சான்றுகள், செப்பேடுகள், மற்றும் இலக்கியங்களின் அடிப்படையிலும், கலைகளின் எச்சங்களைக் கொண்டும் மக்களின் பண்பாடு நாகரீகத்தை வரையறுத்து வந்துள்ளனர். தொல்பொருள் ஆய்வு வல்லுநர்கள் அகழாய்வுகள் மூலமாகவும் மக்கள் பயன்படுத்திய

தொல்பொருட்களைக் கொண்டும் காலத்தைக் கணிக்கின்றனர். ஆனால் நாம் மிக முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டியது நிலவியல் அமைப்புக்கு ஏற்றவாறே மக்களின் பண்பாடும், கலையுணர்வும், நாகரீகமும் அமையப் பெற்றுள்ளது என்பதேயாம்.

## தோற்றம்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி வாழ்ந்த மூத்த குடிகளின் வாழ்விடங்கள் இப்பகுதியில் மட்டுமே இருந்துள்ளது என்பதற்கு வரலாற்று ஆதாரங்கள் மிகப்பரவலாக கிடைத்துள்ளன. தொடர்ந்த இடைவெளியில்லாத நாகரீக பண்பாடு மாற்றங்கள் கொண்ட வரலாற்றுக் கருவூலமாக விளங்கும் காஞ்சிபுர மாவட்டத்தின் நிலப்பரப்பு இப்பூவுலக வரலாற்றின் வேர்ப்பகுதியாக அக்காலத்தே விளங்கியுள்ளது. எழுத்துச் சான்று இல்லாத காலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் எனவும், ஆவணங்களின் அடிப்படையில் எழுத்துச் சான்றுகளின் தோற்றக்காலம் வரலாற்றுக் காலம் எனவும் இருபெரும் பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளனர்.

## வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

தமிழகத்தின் தலைசிறந்த மாவட்டமாக விளங்கும் காஞ்சிபுரத்தை பழைய கற்காலம், இடைக்கற்காலம், புதிய கற்காலம் என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

## பழைய கற்காலம்

இந்தியாவிலேயே முதன் முதலில் இம்மாவட்டத்தில் தான் கற்கால கற்கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. "வரலாற்றின் தந்தை" எனப் போற்றப்படும் "இராபர்ட்புரூஸ் புட்" என்பவர் 1863 - ஆம் ஆண்டு இம்மாவட்டத்திலுள்ள தாம்பரம் வட்டம், பல்லாவரம் இராணுவத்திடல் அருகில் கற்கால மனிதர்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதற்கு அடையாளமாக பல கற்கருவிகளைக் கண்டுபிடித்து உலகிற்கு அறிவித்துள்ளார்.

மதுராந்தக வட்டம் ஓரத்தி, காஞ்சிபுரம் வட்டத்திற்குட்பட்ட கோவிந்தவாடி, பரந்தூர். திருப்புக்குழி, உடவதியூர், தாம்பரம்

வட்டம், ஆலந்தூர், நன்மங்கலம் ஆகிய பகுதிகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலமான பழையகற்கால மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.

முதல் கற்காலக் கருவிகளின், செய்முறை பயன்பாடுகளைக் கொண்ட கற்கருவிகளைப் பயன்படுத்திய மக்கள் இம்மலைப்பகுதியில் வசித்து வந்துள்ளனர் என அறியப்படுகிறது. பிற இடங்களில் கிடைத்த முதல் கற்காலக் கருவிகளுடன் இவற்றை ஒப்புநோக்கிடின் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கி.மு. ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னரே பழங்கால மனிதர்களின் வாழ்விடங்கள் அமைந்திருந்தன என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளத் தெளிவாகிறது.

## இடைக்கற்காலம் :

முதல் கற்காலத்திற்கு அடுத்து வடஇந்தியாவில் வெண்கலக் காலம் தொடங்கியுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொருத்தளவில் கடைக் கற்காலத்திற்கும், பழங்கற்காலத்திற்கும் இடையில் நாகரீகப் பண்பாட்டின் அடிப்படையில் இடைக்கற்காலம் உருவாகியுள்ளது. மலை மற்றும் அதன் பள்ளத்தாக்கில் குடியிருந்த மக்கள் தங்களுக்கு தேவையான குடிநீரைச் சேமித்து வைக்க தகுந்த ஆதாரங்களை உருவாக்க அறியாததால் கடல் போன்ற நீர் நிலைகளுக்கு அருகில் தம் வாழ்விடங்களை கொண்டிருந்தனர். அதனால் வேட்டையாடுதலுடன் மீன்பிடித் தொழிலையும் அறிந்து கொள்ள வழிகோலியது. தனித்தனியாக வசித்து வந்த மக்கள் சிறு குழுக்களாகவும் வசிக்கத் தலைப்பட்டனர்.

இம்மாவட்டத்தில் உள்ள பரந்தூர் மற்றும் வதியூர் ஆகிய பகுதிகளில் இடைக்கற்காலத்தவர் தம் வாழ்விடங்களை கொண்டிருந்ததற்கு அடையாளமாக அவர்களால் பயன்படுத்தப்பட்ட கற்கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்கள்

இம்மாவட்டத்தில் 20-க்கும் மேற்பட்ட இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1863 - ஆம் ஆண்டு

முதல் அவ்வப்போது மைய, மாநில அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையினரால் அகழாய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

## பல்லவமேடு

1953 - 54 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் வட்டம் பல்லவமேட்டில் நடத்தப்பட்ட அகழாய்வில் தொழில் முனைவோர் மற்றும் தொழிற்சாலை இப்பகுதியில் இருந்ததற்கான அடையாளங்கள் காணப்பட்டன. வளையல்கள் செய்து பயன்படுத்தப்பட்டு இருக்கலாம் எனக் கருதலாம்.

## குன்றத்தூர்

மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையினர் (A.S.I) 1956-57 இல் திருப்பெரும்புத்தூர் வட்டம், குன்றத்தூர் நத்தம் சுப்பிரமணியர் கோயில் மலையடிவார வடக்குப் பகுதியில் மூன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் அகழாய்வுகள் செய்துள்ளனர். இவ்வாய்வில் பெருங்கற்கால மக்களின் வாழ்விடங்கள் மற்றும் ஏழு கல்லறைகள் அறியப்பட்டுள்ளன. அவை மூன்று வகையாகக் காணப்படுகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சுற்றி மேலும் பல இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவை (1962 - 63) காஞ்சிபுரம் (1963 - 64) திருப்பெரும்புத்தூர், பரந்தூர் (1964 - 65) வதியூர், வசவசமுத்திரம் (1968 - 69) காஞ்சிபுரம் (1972) ஓரத்தி (1967 - 68) போன்ற இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வசவசமுத்திரத்தில் ரோமானியர் கால மதுக்குடத்தின் கழுத்துப் பகுதிகள் கிடைத்துள்ளன.

## இலக்கியத்தில் காஞ்சிபுரம் :

"காஞ்சி" மரங்கள் மிகுதியாய் விளைந்த பகுதியால் இது காஞ்சி என்று வழங்கலாயிற்று "புரம்" என்பது இடத்தைக் குறிக்கும் சொல்லாக நெடுநாள் வழக்கில் இருந்துள்ளது. அந்தப்புரம், சந்தைப்புரம் போன்ற வழக்குக்களையும் காணமுடிகிறது. கபாடபுரத்தில் இரண்டாம் தமிழ்ச் சங்கம் இருந்ததாகவும், அவ்வூர்ப் பெயரை நோக்கினால் புரம் என்ற பொதுக் கூறினது தொன்மையும் இப்பெயரில் பல ஊர்கள் முன்னர் தமிழ்நாட்டில் இருந்திருக்க

வேண்டும் என்ற உண்மையும் புலப்படும். புரம் என்ற சொல்லும் சிறந்த ஊர்களைக் குறிப்பதாகும். புரம் என்பது புரி எனவும் வழங்கப்படும். சங்க காலத்திய நூலான பத்துப்பாட்டு காஞ்சியைப் பற்றிக் கூறும்போது

"பலர் தொழ விழவு மேம்பட பழலிறல் மூதூர்" எனவும்,
"கல்வியிற் கரையிலா காஞ்சி நகரம்" - என
- திருநாவுக்கரசரும்,
"தேசமெல்லாம் புகழ்ந்து கச்சி" - என
- மாணிக்கவாசகரும்,

"கவிகள்என் றுரைப்போர் தம்முள்
காஞ்சியைப் புகழார் இல்லை"
"காஞ்சியை நினைப்பிற்
காசிக் கடிநகர் வசித்த பேறாம் - என காஞ்சி புராணமும்
"முக்தி தரும் நகரேழுள் முக்கியமாம் கச்சி"
"நகரேஷீ காஞ்சி"

- அதாவது நகரத்தில் சிறந்தது காஞ்சிபுரம் என்று மகாகவி காளிதாசராலும் போற்றப்பட்ட நகரம் காஞ்சி மாநகராகும்.

வெந்தவெண் பொடிப்பூச மார்பின்விரி நூலொருபால் பொருந்தக்
கந்தமல் குலியோடுங் கிபொழிற் கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தா ரவர்போற்ற அணங்கினொ பாடல்புரி
எந்தை மேவிய ஏகம்பந் தொழுதேத்த இடர்கெடுமே - என
- திருஞானசம்பந்தர்

காஞ்சிபுரத்திலுள்ள ஏகாம்பரநாதரை புகழ்ந்து பாடியுள்ளார்.

இங்கு சைவ சமயத்தைச் சேர்ந்த நாயன்மார்களும் வைணவ மதத்தைச் சேர்ந்த ஆழ்வார்களும் வாழ்ந்து வந்துள்ளனர். இம்மாவட்டத்தில் கோயில்கள் மிகுதியாக உள்ளதால் இதனை "கோயில் நகரம்" என்றே அழைப்பர். பெரும்பாணாற்றுப்படை, காஞ்சிபுராணம், மேருமந்திரபுராணம், கந்தபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம், பெரியபுராணம்,

கலிங்கத்துப் பரணி, மணிமேகலை, திருவேகம்ப மாலை, நாலாயிரத்திவ்யபிரபந்தம் போன்ற நூல்கள் காஞ்சியில் அமையப்பெற்ற கோயில்களைப் பற்றியும், கோயில்வாழ் கடவுள்கள் பற்றியும் நமக்கு தெரிவிக்கின்றன.

இதே கால கட்டத்தில் நான்கு சமணத்தலங்களுள் ஒன்றாக திருப்பருத்திக் குன்றமும் கருதப்பட்டது. இது, சமணமதம் காஞ்சியில் செழித்து இருந்தது என்பதற்கான அடையாளமாகக் கொள்ளலாம்.

# அரசியல் பின்னணி

பல்லவர்கள் கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து ஆட்சி செய்யத் தொடங்கினர் அவர்களில் விஷ்ணுகோபன் என்பவன் காஞ்சிபுரத்திலிருந்து ஆட்சி செய்தான் என்பது அலகாபாத் கல்வெட்டால் உறுதிப்படுகின்றது. பல்லவர்கள் சைவம், வைணவம் ஆகிய சமயங்களுக்கு ஆதரவு அளித்தனர். மேலும் சமணசமயத்திற்கும் ஆதரவளித்தனர். பல்லவர்கள் பண்டை நாளில் தமிழகத்தின் வடபகுதியில் ஆட்சிசெய்த ஒளிக்குலத்தினர் என்று டி. என். சுப்ரமணியம் அவர்கள் கூறுவார். பள்ளங்கோயில் செப்பேட்டில் பிராஜிஷ்ணு வம்சம் ஸ்வம் அலங்கரிஷ்ணு என்று கூறுவதிலிருந்து சிம்மவிஷ்ணு தான் பிறந்ததாலே ஒளிக்குலத்தை அலங்கரித்தவன் என்று சுப்ரமணியன் அவர்கள் கூறுவார். முதலாம் இராசராசன் கல்வெட்டில் ஒளிநாகன் என்று பெயர் வருகின்றது. அதனால் பல்லவர்கள் ஒளிக்குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் அவர்களுடைய கிளையினர் தொடர்ந்து தொண்டை மண்டலத்திலிருந்தார்கள் என்பதும் உறுதிப்படும் . கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து 7-ஆம் நூற்றாண்டு வரை ஒளிக்குலம் இப்பகுதியில் நிலைபெற்றிருந்தமை புலப்படும். கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இதனை தலைநகரமாக ஆக்கிக் கொண்டனர். காஞ்சி வீழ்ச்சிகளைச் சந்தித்தபோதிலும் பல்லவர்கள் காஞ்சிபுரத்தை விட்டுச் சென்றதில்லை.

திருப்பருத்திக்குன்றம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் தலைசிறந்த சமணப் பள்ளியைப் பெற்றிருந்தது அதற்கு முன்பேயும் இங்கு சமணப் பள்ளி இருந்திருக்க வேண்டும். சாருதேவியின் குணபதேய பட்டயம் யாப்பணிய சமணர்களுக்கு கொடையளித்த செய்தியைக் கூறுகின்றது. யாப்பணியம் என்ற சமணப் பிரிவு கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் பெல்காம் பகுதியில் தோற்றுவிக்கப்பெற்றது. இச்சமயம் வடஇந்திய சமணத்திலிருந்து மாறுபட்டது. வடஇந்திய சமணப் பெண்களுக்கு வீடுபேறு இல்லை. அவர்கள் ஆண்களாகப் பிறந்துதான் வீடுபேறு அடைய

முடியும் என்று கூறுகின்றது. ஆனால் யாப்பணியம் பெண்களுக்கு வீடுபேறு உண்டு என்று கூறுகிறது. மேலும் பில்லிசூனியம் எடுத்தல், பேய் ஓட்டுதல், தாயத்து கட்டுதல் போன்ற மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் ஆர்வம் காட்டியது. அதனால் மக்கள் ஆதரவு அதற்கும் பெருகியது. சாளுக்கிய மங்களேசனின் மெய்க்கீர்த்தியை எழுதிய இரவிகீர்த்தி என்பவன் யாப்பணிய சமயத்தைப் பின்பற்றினான். அவனைப் போன்று பல அரசர்கள் யாப்பணிய சமயத்தைப் பின்பற்றினர். அதனால் அச்சமயம் கருநாடகம் முழுவதும் பரவியது. இந்தப் பின்னணியில் பல்லவர் அரசியலைப் பார்ப்போம்.

## பல்லவர் ஆட்சி

### சிம்மவர்மன்

திருப்பருத்திக்குன்றம் சமணப் பள்ளி பல்லவ மன்னர்களுடைய ஆதரவைப் பெற்றிருந்தது. பள்ளங்கோயில் செப்பேடுகளில் சிம்மவிஷ்ணுவின் பெருமை பேசப் பெற்றிருந்தாலும் அச்செப்பேடு சிம்மவர்மனின் 6-ஆம் ஆட்சி ஆண்டில் வெளியிடப்பெற்றது. அதனால் சிம்மவர்மனின் ஆட்சித் தொடக்கத்தில் சமணம் செல்வாக்கு பெற்ற சமயமாக விளங்கியது எனலாம். சிம்மவர்மன் கி.பி 536-இல் ஆட்சி தொடங்கி இருபது ஆண்டுகள் ஆட்சி செய்திருக்க வேண்டும். புரியானூர் நடுகல் இவனுடைய ஆட்சி ஆண்டு 19 என்று குறிக்கின்றது. அதனால் இம்மன்னன் இருபதாண்டுகள் ஆண்டிருக்க வேண்டும் எனலாம். இவனுடைய ஆட்சி ஆந்திராவிலும் தொண்டைமண்டலத்திலும் பரவியிருந்தது எனலாம்.

### சிம்மவிஷ்ணு (கி.பி. 554-590)

இம்மன்னன் பள்ளங்கோயில் செப்பேடுகளில் மிகவும் புகழப் பெறுகின்றான். அந்தச் செப்பேடுகளில் சிம்மவர்மன் களப்பிரர்களை வென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவன் சிம்மவர்மனின் மகன், முதலாம் மகேந்திரவர்மனின் தந்தையாகும். இவன் முப்பத்தாறு ஆண்டுகள் ஆட்சி செய்தான் என்பது தொண்டானுக்கு கல்லால் உறுதிப்படுகின்றது. ஆந்திர நாட்டின் ஒரு பகுதியும் தொண்டை மண்டலம் முழுமையும் இவன்

ஆட்சியிலிருந்தது. இவன் சோழர்கள், மலையர் (மலையமான்) மாளவர் (மழவர்) பாண்டியர் ஆகிய மன்னர்களை வென்றான் என்று வேலூர் பாளையம் செப்பேடு மூலம் அறியலாம். காவிரியின் தென்கரை வரை இவனுடைய ஆட்சி பரவி நின்றது என்பதற்கு திருச்சிக்குடை வரை கோயில் கல்வெட்டே சிறந்த சான்று. சிங்களமன்னனையும் கேரளனையும் வென்றான். இந்தச் செய்தி வேலூர் பாளையம் செப்பேட்டால் அறிகிறோம். பள்ளங்கோயில் செப்பேட்டின் தமிழ்ப் பகுதியில் "அமண் சேர்க்கை பருத்தி குன்றில் வஜ்ரநந்தி குரவர்க்கு வெண்குன்ற கோட்டத்து பெருநகர நாட்டு" என்பதன் மூலமும் அதே ஊரில் பள்ளிச்சந்தம் அளித்தமை பற்றிய செய்தியும் நமக்கு செப்பேட்டின் வாயிலாக தெரிய வருகின்றது.

பாவலரைப் போற்றும் தன்மை எடுத்துக்காட்டத்தக்கது. தண்டி ஆசிரியர் அவந்திசுந்தரி கதையில் "சிம்மவிஷ்ணு, புலவர்களுக்கு வாரி வழங்கும் எண்ணம் கொண்டவர். அவரது உதவியைப் பல புலவர்கள் பெற்றுச் சென்றனர் என்று கூறுவதோடு வடமொழிப் புலமை பெற்ற பாரவியை தன் அவைக்கு வருவதற்கு பெரும் விருப்பம் கொண்டு கங்க நாட்டிலிருந்து தருவித்தார் என்று விளக்குகின்றது. பின்னர் அப்புலவரும் அவனது அவையை அலங்கரித்து அனைவரையும் பரவசப்படுத்தினார். இவன் வைணவ சமயத்தைச் சேர்ந்தவன் என்பது உதயேந்திரம் செப்பேட்டால் உறுதிப்படுகின்றது. இருப்பினும் இவன் சமண சமயத்தை ஆதரித்தான் என்பது பள்ளங்கோயில் செப்பேட்டால் உறுதிப்படுகின்றது. சிம்மவிஷ்ணுவிற்குப் பின் அவன் மகன் முதலாம் மகேந்திரன் ஆட்சிக்கு வந்தான்.

## முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 590-630)

இம்மன்னனின் ஆட்சி காவிரிக் கரைவரை பரவியிருந்தது. இவன் முப்பது ஆண்டுகள் மட்டுமே ஆண்டான் என்று அண்மைக் காலம் வரை கருதியிருந்தனர். ஆனால் செங்கம் பகுதி நடுகல் ஒன்று இம்மன்னனின் 39-ஆம் ஆட்சி ஆண்டைக் குறிக்கின்றது. அதனால் இம்மன்னன் 40 ஆண்டுகள் ஆட்சி செய்தான் என்று கருத இடமுண்டு. இவன் ஆட்சி ஆந்திரத்தில் குண்டூர் மாவட்டம்

வரை பரவியிருந்தது என்பது அப்பகுதியில் கிடைக்கும் கல்வெட்டுகளால் உறுதிப்படுகின்றது. கி.பி. 616-இல் அப்பகுதியில் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியின் கல்வெட்டு கிடைப்பதால் அப்பகுதி மகேந்திரவர்மன் ஆளுகையை விட்டுச் சென்றுவிட்டது என்பது புலப்படும். இரண்டாம் புலிகேசி பல்லவனைத் தோற்கடித்த செய்தி ஹைய்ஹோள் கல்வெட்டில் குறிக்கப்பெறுகின்றது. சாளுக்கியப் படையின் எழுச்சி பல்லவனின் ஒளியை மங்கச் செய்தது. பல்லவன் கோட்டைக்குள் ஒளிந்து கொண்டான். (E.I Vol VI, II ) ஆனால் அந்த படையெடுப்பின் இறுதியில் மகேந்திரன் புள்ளலூர் என்ற இடத்தில் புலிகேசியைத் தோற்கடித்தான் என்று கூறுகின்றது. பல்லவ சாளுக்கிய போரில் வெற்றி தோல்வி என்பது மாறிமாறி வந்துள்ளது. இறுதி வெற்றி பல்லவர்களுக்கே வந்தடைந்தது.

மகேந்திரன் முதன்முதலாகக் குடைவரைக் கோயிலை உருவாக்கினான் என்று மண்டகப்பட்டு கல்வெட்டு மூலம் அறிகிறோம். மாமண்டூர், மகேந்திரவாடி, தளவானூர் விளாப்பக்கம், போன்ற ஊர்களில் இவனுடைய குடைவரை கோயில்கள் உள்ளன. பல்லாவரம் குடைவரைக் கோயில் இவன் காலத்தைச் சேர்ந்தது. திருச்சி குடைவரைக் கோயில் இவன் காலத்தது. குடுமியான்மலை, திருமய்யம், சித்தன்னவாசல் போன்ற ஊர்களில் உள்ள குடைவரைக் கோயில்கள் பாண்டியர் காலம் என்று ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

இவன் நாடகம், இசை, சித்திரம் ஆகிய கலைகளில் வல்லமை பெற்றிருந்தான். இவனுடைய நாடக நூல்கள் இரண்டு கிடைத்துள்ளன. மத்தவிலாச பிரஹசனத்தில் பௌத்த சமயத்தைத் தாக்கியெழுதியுள்ளான். இவனுடைய கல்வெட்டுகளில் சித்ரகாரப்புலி என்று அழைக்கப் பெறுகின்றான். அதனால் அவன் ஓவியக்கலையில் சிறந்து விளங்கினான் எனலாம். இவன் நடனக்கலை, நாடகக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை ஆகியவற்றை ஆதரித்தான். இவனது காலத்தில்சிற்பக்கலை மிகவும் உயர்ந்த நிலையை அடைந்திருந்தது.

### சமயநிலை

மகேந்திரன் முதலில் சமண சமயத்தைத் தழுவியவனாக விளங்கினான். நாவுக்கரசருக்குப் பல கொடுமைகளை செய்தான் என்று பெரியபுராணம் கூறுகின்றது. அதன் பிறகு அவன் சைவத்திற்கு மாறினான். இச்செய்தி திருச்சி குடைவரைக்கோயில் கல்வெட்டில் குறிக்கப் பெறுகின்றது. புறச்சமயத்திலிருந்து தன் சமயத்திற்கு வந்தான் என்று அக்கல்வெட்டு கூறுகின்றது. அதனால் மகேந்திரன் காலத்தில் சமயப் போராட்டம் உச்சகட்டத்தை அடைந்திருந்தது எனலாம். விளாப்பாக்கம், பஞ்சபாண்டவமலை மற்றும் முற்றுப் பெறாத குடைவரை கோயில் சமணத்திலிருந்தபோது வெட்டத் தொடங்கியிருக்கலாம். சைவ சமயத்திற்கு மாறிய பின் அக்கோயில் பணி நிறுத்தப் பெற்றிருக்கலாம். மேலும் பெரியபுராணம் கூறும் செய்தி நம்மையெல்லாம் வியப்பிலாழ்த்தும். பாடலிபுரத்திலிருந்த (இன்றைய கடலூர்) சமணப் பாழிகளை இடித்து சிவன்கோயிலாக்கினான் என்ற செய்தியே அது. இந்திய வரலாற்றில் பிற மதத்தை ஆதரிக்கின்ற மன்னர்களை மட்டுமே பார்த்திருக்கிறோம். பெரியபுராணக் கூற்று உண்மையாக இருக்குமானால் அது மகேந்திரனுக்குத் தெரியாமல் நடந்திருக்க வாய்ப்புண்டு.

இவன் காலத்தில் தான் அதிகமான நடுகற்கள் நடப்பெற்றுள்ளன. மொத்தம் இருபத்திரண்டு என்று கணக்கிட்டுள்ளார்கள். இந்நடுகற்கள் மூலம் மகேந்திரன் ஆட்சி தகடூர் நாட்டிலும் பரவியிருந்த செய்தியை உறுதிப்படுத்துகின்றது. அந்நடுகற்களில் பல்லவ வரலாற்றை மாற்றி அமைப்பதற்கான செய்திகள் கிடைக்கின்றன. மேலும் அந்தப் பகுதி சமூக பொருளாதார நிலையை அறிந்து கொள்ள உதவும் செய்திகளையும் கொண்டுள்ளது. அவற்றில் ஒரு நடுகல் பற்றிய செய்தியை காண்போம்.

கோவிசைய
மயிந்திர பருமற்கு
முப்பத்துநான்காவது வாணகோ
அரைசரு மருமக்கள் பொற்றொக்கை

ஆர் இளமகன் கருந்தேவக்கத்தி தன்
னெருமைப்
புறத்தேவா கோவிவ
டிப்பட்டா ன்னென்னு
ன் கல் ந்நாய் ஒ
ரு கள்ள
னைக்கடித்
துக் காத்திரு
ந்தவாறு

இக்கல்வெட்டில் வீரனுடனிருந்த நாய்க்கும் நடுகல் எடுக்கப் பெற்ற செய்தி கூறப்பெறுகின்றது. இவ்வாறு பல அறிய செய்திகள் நடுகற்களில் உள்ளன.

## முதலாம் நரசிம்மவர்மன் (630-668)

இவன் முதலாம் மகேந்திரனின் புதல்வன் ஆவான். சாளுக்கியர்களோடு இவன் நடத்திய போர் சிறப்பு வாய்ந்த போராகும். இப்போர் பல்லவ மரபினை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தது. வாதாபி கொண்ட நரசிம்மபோந்தரையர் என்று தன்னைப் புகழ்ந்து கொண்டான். வாதாபி குடைவரைக்கோயில்களிலும் இச்செய்தியையும் பொறித்து வைத்துள்ளான். ஈழத்தில் இவன் நடத்திய போர் பல்லவ அதிகாரத்தை அங்கு பரவச் செய்தது. இவன் குடைவித்த கோயில் திருக்கழுகுன்றத்தில் உள்ளது. மாமல்லபுரத்தில் உள்ள சில குடைவரை கோயில்கள் இவன் காலத்தில் குடைவிக்கப் பெற்றவை. இவனது நடுகற்கள் செங்கம் பகுதியில் தொடர்ந்து முல்லை வாழ்க்கை நிலைபெற்றிருந்தமையை வலியுறுத்துகின்றன.

## இரண்டாம் மகேந்திரவர்மன் (கி.பி. 668-678)

இம்மன்னன் இரண்டாண்டுகள் ஆண்டான் என்று கருதியிருந்தனர். ஆனால் பெரிய கோளாப்பாடி என்ற ஊரில் கிடைத்த நடுகல் ஒன்று இவன் ஒன்பது ஆண்டுகள் ஆண்டான் என்பதை உறுதிப்படுத்துகின்றது. அதனால் இரண்டாம்

மகேந்திரவர்மன் ஆட்சியில் பெரிய நிகழ்வு ஏதும் நடைபெறவில்லை. அதனால் ஆட்சியை விளக்கும் அளவுக்கு செய்தி ஏதுமில்லை.

## முதலாம் பரமேஸ்வரன் (கி.பி. 680)

இவன் ஆட்சியில் போர்களும் பூசல்களும் நடைபெற்றன. முதலாம் விக்ரமாதித்தன் இவன் மீது படையெடுத்தான். அந்தப் படையெடுப்பு நீண்டநாட்கள் நடைபெற்றன. அந்தப் போரில் விக்ரமாதித்தன் உறையூர் வரை படை நடத்தினான். அந்தப் படையெடுப்பின் போது சில செப்பேடுகளை வெளியிட்டான். உறையூரிலிருந்து திரும்பும் போது பெருவளநல்லூர் என்ற ஊரில் பல்லவப் படைகளால் சூழப்பெற்று தாக்குதலுக்குள்ளாயிற்று. அந்தப் போர் பல்லவர் பக்கம் சாதகமாக இருந்தது. விக்ரமாதித்தன் தோற்றுப் போனான். இந்தத் தோல்வி சாளுக்கிய படைகளுக்குப் பெருஞ்சேதத்தை விளைவித்தது. இந்தப்போரைப் பற்றிக் கூறும் செப்பேடுகள் இதை விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளன. புறநானூற்றில் வருணிக்கப்பெறும் காட்சிகள் சமஸ்கிருதத்தில் தரப்பெற்றுள்ளன. பரமேஸ்வரன் வெற்றி பல்லவ அரசுக்குப் பெருமை தேடித் தந்தது. கூரம் செப்பேடுகள் இதனை விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளன. கூரம் செப்பேடுகள் கூரம் கோயிலுக்கு அளிக்கப் பெற்ற தேவதானம், பாரதப் புறம் ஆகியவை பற்றிக் கூறுகின்றன.

கூரம் செப்பேடுகள் தவிர நடுகல் கல்வெட்டுகளும் கிடைக்கின்றன. அவற்றில் இப்பகுதியில் நிலை பெற்றிருந்த கால்நடை வளர்ப்புப் பொருளாதாரம் மேலோங்கி நின்றதைக் காட்டுகின்றன. மூன்று கல்வெட்டுகளில் பாரதாயர், பாரமதாயர் ஆகிய குடிப்பெயர்கள் குறிக்கப்பெறுகின்றன. அதனால் பல்லவராட்சியில் பழங்குடிச் சமூகமும், பார்ப்பனச் சமூகமும் அருகருகே இருந்தன எனலாம்.

## இரண்டாம் நரசிம்மன் (கி.பி. 700-728)

இவன் முதலாம் பரமேஸ்வரவர்மனின் தவப்புதல்வன் ஆவான். இவன் ஆட்சியில் பல அரிய செயல்கள் நடைபெற்றன.

இவன் காஞ்சிபுரத்துக் கடிகையை வளர்த்தான். இவனுக்கு இராஜசிம்மன் என்ற பெயரும் உண்டு. சீனத்துடன் நட்புறவு கொண்டிருந்தான். கி.பி. 720-ஆம் ஆண்டைச் சார்ந்த சீன வரலாற்றுக் குறிப்பில் முக்கிய செய்தியைக் காணமுடிகின்றது. இராசசிம்மன், திபேத்தியர்களோடு போர் நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்து வந்தான். அதற்கு உதவிபுரியும்படி இராசசிம்மன் சீன அரசனிடம் வேண்டினான். அதற்கு சீனமன்னன் ஆதரவு அளித்துப் படையையும் அனுப்பினான் என்று அந்த வரலாற்றுக் குறிப்பு கூறுகின்றது. அந்நாளைய கடல் வாணிகத்தில் அராபியர்களும், சீனர்களும் போட்டியிட்டனர். அதன் விளைவாக இராசசிம்மன் சீனர் பக்கம் நின்றான். தென்கிழக்காசிய நாடுகளில் பல்லவர் ஆதிக்கம் பரவியது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வடிக்கப்பெற்ற வயலூர்க் கல்வெட்டில் உள்ள செய்தி இவன் ஆட்சி கிழக்கிந்தியத் தீவுகளில் பரவியிருந்ததைச் சுட்டி நிற்கின்றது. அவனுடைய கலைப்பணி மாமல்லை, காஞ்சிபுரம், பனைமலை ஆகிய ஊர்களில் நிலை பெற்றுள்ளன. மாமல்லையில் உள்ள குடைவரைக்கோயில்கள் ஒற்றைக் கற்கோயில்கள், கட்டடக்கோயில்கள் ஆகியவை அனைத்தும் இராசசிம்மனின் கலைப்பணி என்று முனைவர் இரா. நாகசாமி அவர்கள் குறிப்பிடுவார் இக்கருத்தினை மறுப்பாரும் உண்டு.

திருப்பருத்திக்குன்றத்தில் இராசசிம்மனின் காலத்துக் கோயில் ஒன்று உள்ளது. அது சந்திரபிரபா கோயில் என்று அழைக்கப் பெறுகின்றது. சந்திரபிரபா கோயிலில் சிம்மத்தூண்கள் கட்டப் பெற்றுள்ளன. மணற்கல்லால் கட்டப்பெற்ற இக்கோயில் கைலாசநாதர் கோயில், பனமலைக்கோயில் ஆகிய கோயில்களை நினைவுப்படுத்துகின்றது. இராசசிம்மன் தன்னை ஒரு சைவ சித்தாந்தி என்று கூறிக் கொள்கிறான். இருப்பினும் அவன் சமணப் பள்ளியையும் அமைத்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இது இவனுடைய சமயப்பொறையைக் காட்டுகின்றது. இவனுடைய விருது பெயர்கள் முன்னூறுக்கும் மேல் தரப் பெற்றுள்ளன. அவை பல சமயங்களை ஆதரிப்பவன் என்பதை வலியுறுத்தி நிற்கின்றன. வாழா என்ற விருதுப் பெயர் வாமாசாரத்தை அவன் போற்றினான் என்பதைக் காட்டுகின்றது. கைலாசநாதர் கோயில், புத்தர் கோயிலைப் போல அமைக்கப் பெற்றுள்ளமையால் புத்தமதக்

கருத்துகளுக்கும் அவன் ஆதரவு கொடுத்தான் எனலாம். நாகப்பட்டினத்தில் சூடாமணி விகாரம் என்ற பெயரில் விகாரம் அமைக்க அனுமதி அளித்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சோழர் ஆட்சி

பல்லவர்களுக்குப்பிறகு சோழர்கள் தொண்டை மண்டலத்தைத் தன்னாட்சியின் கீழ்க்கொண்டு வந்தனர். சோழர்களில் விசயாலயனுடைய மகன் முதலாம் ஆதித்தன் தொண்டை மண்டலத்தை தன் ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தான் அவனுக்கு தொண்டை நாடு பாவல இராசகேசரி என்ற விருது பெயரும் உண்டு. இவனுக்கு பின்வந்த முதலாம் பராந்தகன் தொண்டை மண்டலத்தைத்தன் கீழ் வைத்திருந்தான். இருப்பினும் கி.பி. 907 முதல் 911 வரை கல்வெட்டுகள் சக ஆண்டைக் குறிக்கின்றன. அதனால் ஆதித்தன் இறந்த பின் தொண்டை மண்டலம் சோழர் கைவிட்டுச்சென்றிருக்க வேண்டும். கி.பி. 911 முதல் பராந்தகனுடைய நான்காம் ஆட்சி ஆண்டு கல்வெட்டுகள் கிடைக்கின்றன. ஆனால் மூன்றாம் கிருஷ்ணன் தொண்டை மண்டலத்தை பிடித்து ஆட்சி செய்தான். பராந்தகனின் 40 -ஆம் ஆண்டு ஆட்சிக்குப் பின் தொண்டை மண்டலம் கைவிட்டுப் போய்விட்டது.

உத்தமசோழன் ஆட்சியில் தான் தொண்டை மண்டலம் சோழர் ஆட்சியின் கீழ் கொண்டுவரப் பெற்றது. உத்தமசோழனின் நிருவாகம் குறிப்பிடத்தக்கது. திருமால்பூர், காஞ்சிபுரம் போன்ற இடங்களில் கிடைக்கும் கல்வெட்டு, செப்பேடு ஆகியவை பல ஆண்டுகளாக சீர்குலைந்திருந்த கோயில் நிருவாகத்தையும், ஊர், நகர நிருவாகத்தையும் சீர்செய்த பெருமை உத்தம சோழனையே சேரும்.

கண்டராதித்தன் பராந்தகனுக்குப்பின் ஆட்சிக்கு வந்தான். அவன் ஆட்சியில் பெரிய மாற்றம் ஏதும் இல்லை. கண்டராதித்தனுக்கு மேற்கெழுந்தருளிய தேவர் என்னும் பட்டம் உண்டு. அதற்குப்பல வியாக்யானங்கள் தரப்பெறுகின்றன. இருப்பினும் அவரும், அவருடைய மனைவியும் சிவத்தொண்டில்

மிகுந்த ஈடுபாடு கொண்டு இருந்தமையால் ஆட்சிப்பரப்பை விரிவாக்குவதில் ஆர்வம் காட்டவில்லை. கண்டராதித்தனுக்குப்பின் அவனுடைய தம்பி அரிஞ்சயன் ஆட்சிக்கு வந்தான். அவன் இரண்டு ஆண்டுகளே ஆட்சி செய்தான். ஆற்றூரில் நடந்த போரில் இறந்து விட்டான். அவனை "ஆற்றூர் துஞ்சிய தேவர்" என்று அழைத்தனர். அரிஞ்செயனுக்குப் பின் சுந்தரசோழன் ஆட்சிக்கு வந்தான். இவன் அரிஞ்செயனின் மகன் ஆவான். சுந்தரசோழன் குறுகிய காலமே ஆட்சி செய்தான். இவனுடைய மகன் ஆதித்தகரிகாலன் இளவரசு பட்டம் கட்டப்பெற்றான். ஆதித்தகரிகாலன் வீரபாண்டியன் தலைகொண்ட கரிகாலசோழ தேவர்க்கு யாண்டு என்று அவர் கல்வெட்டு தொடங்கும். வீரபாண்டியனைக் கொன்றமையால் பழிதீர்ப்பதற்கு பாண்டி நாட்டுப்பிரம்மராயர்கள் தந்திரமாக இவனை கொலை செய்தார்கள். இவனுக்குப் பின் உத்தமசோழன் ஆட்சிக்கு வந்தான். அவனுக்குப்பின் முதலாம் இராசராசன் ஆட்சிக்கு வந்தான். அவன் சோழப் பேரரசை மேன்மை கொள் பேரரசாக உயர்த்தினான்.

## முதலாம் இராசேந்திரன்(கி.பி. 1012-44)

இவன் முதலாம் இராசராசனின் மூத்தமகன். முதலாம் இராசராசனின் வெற்றிக்கு துணைநின்றவன். கிழக்கிந்திய தீவுகள் வரை அவன் படையெடுப்பு நிகழ்ந்தது. இந்த வெற்றியையும், கங்கை வெற்றியும் இரத்தின சுருக்கமாக கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு சிங்காதனத்திருந்த செம்பியர் கோன் என்று கூறும். இவனுடைய படையெடுப்பு கடற்கரையையொட்டி நிகழ்ந்தது. அதற்கு காரணம் கீழ்த்திசை நாடுகளுடன், வாணிகத் தொடர்பினை வலுப்படுத்தவே இந்தப் படையெடுப்பு நிகழ்ந்தது. இந்தப் படையெடுப்புப் பற்றி அவனுடைய மெய்க்கீர்த்தி விரிவாகக் குறிப்பிடுகின்றது. கரந்தை செப்பேடுகள் போச மன்னர் முதலாம் இராசேந்திர சோழனுக்கு தங்க இரதத்தை அன்பளிப்பாக அளித்தான் என்று கூறுகின்றது. மேலும் இந்தியாவின் கிழக்குக் கடற்கரை நாடுகளின் வாணிகத் தொடர்பு மேம்பாடடைந்தது. இந்தப் போரில் கங்கை வெற்றி குறிப்பிடப்பிடத்தக்கது. அந்த வெற்றியின் நினைவாக கங்கைக் கொண்ட சோழபுரம் என்ற நகரத்தை உருவாக்கி சோழப்பேரரசின் தலைநகரை

தஞ்சையிலிருந்து கங்கைக்கொண்ட சோழபுரத்திற்கு மாற்றினான். அங்கு ஒரு பெரிய ஏரியை வெட்டி அதற்குச் சோழ கங்கம் என்று பெயரிட்டான். தொண்டை மண்டலத்தில் இவனுடைய பள்ளிப்படை இருந்தற்கான குறிப்புகள் கிடைக்கின்றன. அது நாட்டேறிக்கருகிலுள்ள பிரம்மதேசமாக இருக்கலாம்.

திருப்பருத்திக்குன்றத்தில் முதலாம் இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்திப் பகுதிகள் மட்டும் கிடைத்துள்ளன.

## மூன்றாம் குலோத்துங்கன்

இம்மன்னனது காலத்தில் சோழப் பேரரசு மறுமலர்ச்சிப் பெற்றது. இவனுடைய கல்வெட்டு "மதுரையும் பாண்டியர் முடித்தலையும் கருவூரும் கொண்ட குலோத்துங்க சோழத் தேவர்க்கு" என்று தொடங்குகின்றது. இவன் காலத்து சிற்றரசர்கள் சிலர் குலோத்துங்கனுக்கு ஆதரவாக நின்றனர். அதனால் பாண்டியர்களையும், கொங்கு அரசர்களையும் வென்றான். இவன் காலத்தில் திரிபுவனம் கோயில் கட்டப்பெற்றது.

இம்மன்னரது காலத்தில் திருப்பருத்திக்குன்றத்துக் கோயிலுக்கு எயிற்கோட்டத்து அம்பியிலே இருபதுவேலி நிலம் பள்ளிச்சந்தமாக அளித்தச் செய்தியைக் கூறுகின்றது. இந்த மன்னனின் 22-ஆம் ஆட்சி ஆண்டில் பழைய கல்வெட்டுப்படியை வெட்டி வைத்தள்ளார்கள். அந்தக் கல்வெட்டு முதலாம் விக்ரம சோழனுடைய காலத்தைச் சேர்ந்தது. இக்கல்வெட்டு நில விற்பனைப் பற்றியது.

## சோழர்கள்

விசயாலயன் தஞ்சையை முத்தரையர்களிடமிருந்து கைப்பற்றினான் என்று இது வரைகருதப்பெற்று வந்தது. ஆனால் அண்மையில் கண்டு பிடிக்கப்பெற்ற இந்தளூர் செப்பேடுகள் அவன் கம்பவர்மனிடமிருந்து கைப்பபற்றினான் என்று கூறுகின்றது. அதனால் தஞ்சையை ஆண்டுக் கொண்டிருந்த முத்தரையர்கள் பல்லவர்களுக்குக் கீழ் ஆட்சி செய்தார்கள் என்பது புலப்படுகின்றது. விசயாலயனுக்குப் பின் முதலாம் ஆதித்தன் கி.பி. 880 - ல் ஆட்சிக்கு வந்தான் அவன் தொண்டை நாட்டை அபராஜிதனிடமிருந்து கைப்பற்றினான். அதனால் அவனுக்கு

தொண்டை நாடுபாவிய இராசகேசரி என்ற பட்டம் வழங்கப்பெற்றது. ஆதித்தன் ஆட்சி முடிந்தபின் முதலாம் பராந்தகன் ஆட்சிக்கு வந்தான். இவன் கி.பி. 907 - இல் ஆட்சிக்கு வந்தான். இவன் மதுரைகொண்ட பரகேசரி என்றும் மதுரையும் ஈழமும் கொண்ட பரகேசரி என்றும் அழைக்கப்பெற்றான். தமிழகம் முழுவதும் 700 - க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் கிடைக்கின்றன. தொண்டை மண்டலத்தில் இவனுடைய கல்வெட்டுகள் நூற்றூக்கும் மேல் கிடைத்துள்ளன. திருவண்ணாமலை, கச்சி கடலாடி, திருமலை, சின்னையன்பேட்டை, சாத்தனூர், தாழையூத்து, காக்கலூர் ஆகிய ஊர்களில் கிடைக்கும் கல்வெட்டுகள் குறிப்பிடத்தக்கவை பின்னால் கூறப்பெற்ற ஐந்து ஊர்க்கல்வெட்டுகள், நடுகற்கள், காக்கலூர் நடுகல்லில் பாடிகாவல் பேசப்பெறுகின்றது. பாடிகாவல் பற்றி இதுவே காலத்தால் முற்பட்ட கல்வெட்டு.

பராந்தகன் காலத்தில் மூன்றாம் கிருஷ்ணன் தொண்டை மண்டலத்தின் மீது படையெடுத்தான். அவனுடைய 15 - ஆவது ஆட்சி ஆண்டில் தொண்டைமண்டலத்தின் மீது படையெடுத்திருக்க வேண்டும். அந்த ஆட்சி ஆண்டிலிருந்து அவன் கல்வெட்டுகள் தொண்டை மண்டத்தில் கிடைக்கின்றன. தொண்டை மண்டலம் சோழராட்சியிலிருந்து நழுவிப்போய் விட்டது. பராந்தகனுடைய மூத்தமகன் இராஜாதித்தன் தக்கோலப் போரில் கிருஷ்ணனால் கொல்லப்பெற்றான். மனமுடைந்து போன பராந்தகன் கண்டராதித்தனுக்குப் பட்டங்கட்டிவிட்டு இறந்து போனான். கண்டாதித்தன் தம்பி அரிஞ்சயன் இரண்டாண்டுகள் ஆண்டான். அப்போது தொண்டைமண்டலத்தை தங்கள் ஆட்சிக்குக் கீழ் கொண்டு வர அரிஞ்சயன் படையெடுத்தான். அந்தப்படையெடுப்பில் மேல் பாடிக்கருகில் உள்ள ஆற்றூரில் கொல்லப்பெற்றான். திருவிடைமருதூர் கல்வெட்டொன்று அரிஞ்சயன் மகளார் பாணாதிராஜதேவியார் என்று கூறுகின்றது. அதனால் அரிஞ்சயன் தன்மகளை பாண அரசனுக்கு மணமுடித்திருந்தான் என்பது தெரிகின்றது.

அரிஞ்சயன் இறந்த பின் சுந்தர சோழன் ஆட்சிக்கு வந்தான். இவனுக்குப் பராந்தகன் என்ற பெயரும் உண்டு. அதனால் இவன்

இரண்டாம் பராந்தகன் என்று அழைக்கப் பெற்றான். இவன் ஆட்சியின் போது இளவரசு பட்டம் கட்டப்பெற்ற ஆதித்த கரிகாலன் கொல்லப்பெற்றான். அந்த நேரத்தில் உத்தம சோழனும் (கண்டராதித்தன் மகன்) இராஜராஜனும் அரியணையேறும் தகுதி பெற்றிருந்தனர். உத்தமசோழனை அரியணையேற இராசராசன் ஒப்புக்கொண்டான். உத்தமசோழன் தொண்டைமண்டலத்தில் பல நிருவாகசீர்திருத்தங்களை கொண்டு வந்தான் என்பதற்கு திருமால்பூர் கல்வெட்டே சிறந்த சான்று. மேலும் இப்பகுதி கோயில்களுக்குப் பல நிவந்தங்களை அளித்துள்ளான்.

உத்தமசோழனுக்குப் பின் முதலாம் இராசராசன் (கி.பி. 985-1014) ஆட்சிக்கு வந்தான் இவன்தான் மெய்க்கீர்த்தியை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவன். இவனுடைய மெய்க்கீர்த்தி "திருமகள் போலப் பெருநிலச்செல்வியும் தனக்கே உரிமை பூண்டனம் மனக்கொளகாந்தளூர் சாலை கலமறுத்தருளி" என்று கூறுகின்றது. அண்மையில் கிடைத்த அவன் கல்வெட்டு ஒன்று காந்தளூர்ச் சாலை கலமறுந்தருளி மலையாளரைத்தலையரிந்து என்ற செய்தியைக் கூறுகின்றது. இவன் ஆட்சிப் பொறுப்பேற்று 1000 ஆண்டுகள் ஆனமையை அண்மையில் கொண்டாடினார்கள். இவன் ஆட்சியில் வருவாய் நிருவாகம் செம்மைப்படுத்தப்பெற்று. வடக்கே வேங்கி முதல் தெற்கே கன்னியாகுமரி ஈழம் வரை அவன் ஆட்சி பரவியிருந்தது. பல மண்டலங்கள் உருவாக்கப் பெற்றன. மண்டலங்கள் பல வளநாடுகளாவும், வளநாடுகள் சில நாடுகளாகவும் பிரிக்கப்பெற்று வருவாய் நிருவாகம் செம்மை படுத்தப் பெற்றது.

## முதலாம் இராசேந்திரன் (கி.பி. 1014- 1054)

இவன் இராசராசனின் மகனாவான். அவனைக் காட்டிலும் பல மடங்கு ஆற்றலும், ஆட்சிப் பரப்பை விரிவு படுத்தும் சிறப்பும் கொண்டவன் ஆவான்.

> கங்காநதியும் கடாரமும் கைக்கொண்டு சிங்கா
> தனத்திருந்த செம்பியர் கோன்

என்று ஒட்டக் கூத்தரால் போற்றப் பெற்றவன் இவனுடைய கங்கை வெற்றிக்குப் பின் கங்கை கொண்ட சோழபுரம் என்ற பெயரில் தலைநகரை உருவாக்கினான். இவன் காலம் முதல் தஞ்சாவூர்

பின்னுக்குப் போயிற்று. கங்கை கொண்ட சோழபுரம் புகழ் பெறத் தொடங்கியது.

முதலாம் இராசேந்திர சோழன் கல்வெட்டு ஒன்று திருப்பருத்திக்குன்றத்தில் கிடைத்துள்ளது. இவனுக்கு முன் ஆண்ட சோழ அரசர்கள் கல்வெட்டு ஏதும் இதுவரையில் கிடைக்கவில்லை. அதற்குக் காரணத்தைக் கண்டறிவதில் சிக்கல் இருப்பினும் கோயில் திருப்பணி செய்யும்போது ஆதித்தன் முதல் அடுத்து ஆண்டவர்கள் வரை கல்வெட்டு அழிந்து பட்டிருக்க வாய்ப்புண்டு.

இவனுடைய ஆட்சியின் போது நான்கு செப்பேடுகள் வெளியிடப் பெற்றன. கரந்தை, திருவாலங்காடு செப்பேடுகள் எசாலம் செப்பேடுகள் ஆகியவை மிகச்சிறப்பானவை. கரந்தை செப்பேடுகள் இவன் கம்போடிய மன்னனை வென்றபோது பொற்றேந்தன் ஒன்றைக் கொடுத்தான் என்று கூறுகின்றன. எசாலம் செப்பேடுகள் அவனுடைய இராஜகுரு சர்வசிவ பண்டிதர் என்று கூறுகிறது. திருவாலங்காடு செப்பேடு பிரம்மதேயம் வெள்ளான் வகையாக மாற்றப் பெற்றதைக் கூறுகின்றது.

இவன் ஸ்ரீவிஜயம் வரை படையெடுத்தான். இவன் காலத்தில் மேற்கே இஸ்ரேலிலிருந்து கிழக்கே சீனாவரை வாணிகம் நடைபெற்றது. அந்த வாணிகத்தைத் தன்னாதிக்கத்தில் வைத்திருக்கவே ஸ்ரீவிஜயம் வரை படையெடுத்தான். அதனால் தமிழ் வணிகர்கள் சீனம் வரை வாணிகம் செய்யச் சென்றார்கள். இந்த வாணிக வளர்ச்சி சோழப் பேரரசுக்கு பொருட்செல்வத்தைத் தந்தது. இராசேந்திரன் தன்னுடய ஆட்சியிலும் வருவாய்த் துறையைச் சீர்படுத்தினான். இவன் ஆட்சி பல்வேறு துறைகள் வளர்ச்சி பெறுவதற்கு வழிவகுத்தது. நீர்ப்பாசனம், வேளாண்மை வாணிகம், கட்டடக்கலை, சிற்பக்கலை, சமயம் ஆகிய அனைத்துத் துறைகளும் வளர்ந்தன.

முதலாம் இராசேந்திரனுக்குப்பின் முதலாம் ராஜாதிராசன், இரண்டாம் ராஜேந்திரன் ராஜமகேந்திரன், வீரராஜேந்திரன்

என். ... சென்னை-60

அதிராஜேந்திரன் ஆகிய மன்னர்கள் ஆண்டுள்ளனர். இவர்கள் ஆண்டபின் அதிராஜேந்திரன் வாரிசின்றி இறக்கவே கீழைச் சாளுக்கிய மரபினைச் சேர்ந்த இராசேந்திரன் என்று அழைக்கப் பெற்ற முதற்குலோத்துங்கன் சோழர் அரியணை ஏறினான். இவனுக்கு சுங்கம் தவிர்த்த சோழன் என்ற பெயரும் உண்டு. இவன் வாணிக வளர்ச்சிக்காவும், இடங்கைப் படையின் உதவி நாடியும் சுங்கம் தவிர்க்கும் செயலை மேற்கொண்டான் என்று டி. என். சுப்ரமணியம் அவர்கள் கூறுவார். மேலும் இவன் ஆட்சிக் காலத்தில் சிற்றரச மரபினர் எழுச்சி பெற்றனர். மேலும் இவன் 52 ஆண்டுகள் ஆண்டான் என்று இதுவரை கருதி வந்தனர். ஆனால் கிருஷ்ணகிரி மாவட்டம் கைலாவரம் என்ற ஊர்க்கல்வெட்டு மூலம் இவன் ஆட்சி 54 ஆண்டுகள் நிலைத்திருந்தது என்பது புலப்படுகின்றது. இவன் ஆட்சி வடக்கே வேங்கி முதல் தெற்கே கன்னியாகுமரி வரை பரவியிருந்தது.

## முதலாம் விக்கிரம சோழன் (கி.பி. 1124)

இவன் குலோத்துங்கனுக்குப் பின் ஆட்சிக்கு வந்தான். இவன் காலத்திலும் பல போர்கள் நிகழ்ந்தன. இவன் காலத்தில் தில்லையில் பல கட்டடங்கள் (திருச்சுற்று மாளிகை, சில கோபுரங்கள், சில மண்டபங்கள் கட்டப்பட்டன. தில்லை கோயில் சோழர்களுடைய குலதெய்வம். அதனால் விக்ரம சோழன் காலம் முதல் பல கட்டடங்கள் கட்டப் பெற்றன. விக்ரம சோழன் காலத்தில் சோழப் பேரரசு தொடர்ந்து புகழ்பெற்றது. திருப்பருத்திக் குன்றத்திலும் இவன் காலத்துப் பணிகள் நிறைந்துள்ளன. இவன் காலத்துக் கல்வெட்டு ஒன்று பழைய கல்வெட்டுப் படி என்று குறிக்கப் பெறுகின்றது. இக்கல்வெட்டு மகாசபையார் சமணர் கோயிலுக்கு விற்றதாக கூறுகின்றது. இது தவிர வேறெந்த கல்வெட்டும் கிடைக்கவில்லை.

விக்ரமசோழனுக்குப் பிறகு ஆட்சி செய்த இரண்டாம் குலோத்துங்கன் இரண்டாம் விக்ரமசோழன் இரண்டாம் இராஜராஜன் ஆகியோர். ஆனால் இவர்களின் கல்வெட்டு ஏதும் இவ்வூரில் கிடைக்கவில்லை. முதல் விக்ரமசோழனுக்குப் பின் மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவனுடைய கல்வெட்டுகள் பள்ளிச்சந்தம் அளித்தமை பற்றிக்

கூறுகின்றது. அரசனே நேரடியாக முயற்சி எடுத்துக் கொண்டு பள்ளிச்சந்தம் அளித்தமை குறிப்பிடத்தக்கது. ஊர்ச்சபை வேண்டி நிலத்தை வாங்கிப் பள்ளிச்சந்தம் அளித்துள்ளான். இவன் திரிபுவனம் பெருங்கோயிலைக் கட்டியவன். சைவத்தையும் போற்றியவன். ஆனால் சமயப்பொறையை தன்னுடைய வாழ்க்கை கொள்கையாகக் கொண்டவன். அதனால் சமணக் கோயிலுக்குப் பள்ளிச்சந்தம் அளித்துப் பெருமை பெற்றான். இவனை பாண்டியன் எதிர்த்தான். கொங்குச் சோழர்கள் எதிர்த்தனர். இன்னும் பல சிற்றரச மரபினர் எதிர்த்தனர். அவர்களை வென்று சோழப் பேரரசை நிலைத்து நிற்கச் செய்தான். பாண்டியனின் வாரிசுகளுக்கு நாட்டை அளித்து ஆளச் செய்தான். இவனுடைய ஆட்சியின் போது சிற்றரச மரபினர் சுயாட்சி பெற்று ஆளத் தலைப்பட்டனர்.

## விஜயநகரப்பேரரசு புக்கர் I

ஹம்பியைத்தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த விஜய நகர மரபினர் டில்லி சுல்தானியர்களுடன் பாமினி சுல்தானியர்களுடனும் போரிட்டு தங்கள் அரசை பேரரசு நிலைக்கு எழுச்சி பெறச்செய்தார். ஹரிஹரர் புக்கர் I ஆகியோர் வித்யாரண்யர் அறிவுரையைப் பெற்று ஹம்பியில் விஜயநகரப் பேரரசை உருவாக்கினர். சுமார் 300 ஆண்டுகாலம் விஜயநகர் பேரரசு நிலைத்திருக்கிறது. ஹரிஹரர் ஆட்சியின் போது போசளமன்னன் மூன்றாம் வள்ளாளன் ஆண்டுக் கொண்டிருந்தான். சில நேரங்கள் அவன் உதவியும் விஜநகரர்களுக்குக் கிடைத்தது. முதல் மன்னன் ஹரிஹரன் 1357-ஆம் ஆண்டு வரை ஆண்டான். அவனுக்குப்பின் முதலாம் புக்கன் ஆட்சிக்கு வந்தான். இவன் ஆட்சி தொண்டைமண்டலம் வரை பரவியிருந்தது. அதற்குத்திருப்பருத்திக்குன்றத்துக் கல்வெட்டே சான்று. இவனுடைய மகன் வீரகம்பணன் மதுரை வரை படையெடுத்து சுல்தான்களைத் தோற்கடித்தான். வீரகம் பண்ணனின் படையெடுப்பு பல மாற்றங்களைக்கொண்டு வந்தது.

# திருப்பருத்திக்குன்றம்

திருப்பருத்திக்குன்றம் என்னும் ஊர்ப்பெயர் பருத்தி விளைந்த நிலமாகக் கொண்டு பொருள்விளக்கம் அடிப்படையில் பெயர்க்(காரணம்) கூறுவர். அதற்கு ஏற்றாற்போல் பருத்திச் செடிக்குள் மறைந்து விடாவண்ணம் சுமார் 12 அடி உயரத்தில் சாமியின் திருஉருவம் அமைந்துள்ளதைக் காரணமாக காட்டுவர்.

திருப்பருத்திக்குன்றம் செம்பொற் குன்றம் அல்லது செம்பொற் குன்று என்னும் பெயரின் திரிபு என்றும் கூறுவர். இதன்பொருள் அழகான பொன்மலை என்பதாகும். இன்று அழகு என்னும் பொருள்தரும் அடைக்கு இணையானதாக திரு என்பதைக் கொள்ளலாம் என்றும் குறிப்பிடுவர். கல்வெட்டு எண் 22 முதல் 24 வரையான கல்வெட்டுகள் இதை தெரிவிக்கின்றது. அங்குள்ள சமாதி கற்களை அருணகிரி மேடு (தற்போது அருணகிரி மோடு (அ) பலி குடம்) என்று அழைக்கின்றனர். அருணகிரி என்பது செம்பொற்குன்றுவின் சமஸ்கிருதச் சொல்லாக்கம்.

இக்கோயிலுக்கு தென்மேற்கே உள்ள குளத்திற்கு அருகில் அமைந்துள்ள அருணகிரி மேட்டுப் பகுதியில் புஷ்யசேனர், அனந்த வீர்யவாமனர். புஷ்பசேன வாமனாச்சாரியர், சங்கிரகீர்த்தி முனிவர், மல்லி சேனாவாகனர் ஆகிய 5 முனிகள் முக்தியடைந்து தாமரை மலர் போன்ற பீடங்களுடன் உள்ள கருவறை சமாதியில் இடம் பெற்றுள்ளனர். குறிப்பிடப்பட்ட செய்திகளுடன் கூடிய மூன்று கல்வெட்டுகள் இங்குள்ளன.

"அண்" (அண்ணம்) என்பது மேலே இருப்பதை குறிக்கும் தமிழ்ச்சொல். இவ்வடிப்படையிலேயே அண்ணாமலை (திருவண்ணாமலை) மேலாக அமைந்த மலை என்று

வழங்கப்படுகிறது. குன்று நிறைந்த பகுதிகளில் தான் சமண சமய முனிவர்கள் வாழ்ந்தார்கள். ஆனால் ஊரின் கண் அமையப்பெற்ற இத்தலத்திற்கும் குன்றம் என வழங்கப்பட்டு இருக்கலாம் என்றும் எண்ணத் தோன்றுகிறது.

# ஊர் அமைப்பு

இவ்வூர் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருப்பருத்திக்குன்றம் ஊராட்சியில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமம் ஆகும். இவ்வூருக்கு செல்ல காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் இருந்து சுமார் 5 கிலோ மீட்டரும், காஞ்சிபுரம் இருப்புப் பாதை (இரயில்) நிலையத்தில் இருந்து 6 கிலோ மீட்டரும் பயணிக்க வேண்டும்.

இக்கிராமத்தில் சிறு தெய்வங்களாக பெருமாள் கோயில் (சந்திரபிரபா பின்பக்கம்) அமைந்துள்ளது. பிள்ளையார் கோயில் (ஊரின் நுழைவில்), எல்லையம்மன் கோயில் (மேற்கு), கிறித்துவ தேவாலயம் (கிழக்கு), கங்கையம்மன் கோயில், பொன்னியம்மன் கோயில் போன்ற சிறு தெய்வக் கோயில்களும் அமைந்தள்ளன. இவ்வூரின் முக்கியத் தொழிலாக விவசாயம், பட்டு நெசவு, சாயவேலை(வண்ணமேற்றல்) போன்றனவாகும்.

## வரலாற்றுச் செய்திகள் :

தமிழகத்தில் உள்ள காலத்தால் முந்திய கல்வெட்டுகள் "தமிழி " கல்வெட்டுகள் ஆகும். இம்மாவட்டத் தலைநகரிலிருந்து 15 கி.மீ . தூரத்தில் உள்ள வையவூரில் உள்வட்ட (மாமண்டூரில்) தமிழிக் கல்வெட்டு கிடைத்திருப்பது சிறப்பாகும். இம்மாவட்டத்தில் கிடைக்கும் ஒரே தமிழிக் கல்வெட்டு இதுவாகும். "கனிமான் தேனூர் தந்த கோன் குன்று செயிதான் சிறு . . . . . . வன" எனத் தமிழ்ப்பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. நான்கு வரிகளாகக் காணப்படும் அக்கல்வெட்டு தேனூரைக் கைப்பற்றிய கணிமான் என்ற சிற்றரசன் அக்குன்றினை அமைக்க ஆணையிட்டதன்படி சிறுவன் அல்லது சாளவன் என்ற கல்தச்சன் (ஸ்தபதி) நிறைவேற்றியுள்ளான் எனப் பொருள் கூறுகிறது. இக்கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு கி.பி. 100 - 200க்கு இடைப்பட்ட காலத்ததாக கணிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்துக்கு அருகே உள்ள வசவசமுத்திரம் மற்றும் பல்லவமேட்டில் நடத்தப்பட்ட அகழாய்வுகளில் தமிழ்ப் பிராமி (தமிழி) எழுத்துப் பொறிக்கப்பட்ட மட்கலத் துண்டுகள் கிடைத்துள்ளன.

சமண மதம் தென்னகத்தில் கி.மு. 2-1 - ஆம் நூற்றாண்டிலேயே பரவத் தொடங்கியது எனலாம். சமண மதம் காஞ்சியில் வளர்ந்து வேரூன்ற சமணத் துறவி திகம்பரரே காரணமாவார். இவர் இங்கு கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் சமணப்பள்ளி நடத்தி பல துறவிகளை உருவாக்கியுள்ளார். சமணமத முக்கியத் தலங்களில் ஒன்றாகக் காஞ்சி மாநகரம் கருதப்படுவதாக பிரபாசந்திராவைச் சேர்ந்த கதாகோசனும், நேமிதத்தனும் தெரிவிக்கின்றனர். காஞ்சியில் தீட்சை பெற்றே சாமந்தபத்தர் தன்னுடைய மத அற ஒழுக்கத்தை நாடெங்கும் பரவச் செய்துள்ளார். சமணமத தத்துவப் போதகர் அகலங்கர் புத்த மதத்தினரை எதிர்த்துக் காஞ்சியில் சொற்போர் நிகழ்த்தியுள்ளார். சாமந்தபத்தரின் "ஆப்தமீமாம்சா"விற்கு உரைநடை எழுதியுள்ளார். இவரது காலத்தில் கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் சமணம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்கிப் பெருகியிருந்தது.

இந்து மத மறுமலர்ச்சியினால் சமண, புத்த மதங்களின் வளர்ச்சி தேக்க முற்றாலும் சமண சமயத்தைச் சேர்ந்தோர் இப்பகுதியில் தொடர்ந்து, வசித்து வந்ததால் சமணம் ஓரளவு நிலை பெற்று உள்ளது. மன்னர்களும் சமயப் பொறையுடன் அனைத்து மதத்தினருக்கும் ஆதரவு அளித்துள்ளதால் சமணம் தழைத் தோங்கியுள்ளது. சமண மத ஞானிகள் பலர் காஞ்சியில் வசித்துள்ளனர்.

சதுர்வம்சஸ்தாபகர் வாசுதேவ சித்தாந்த பட்டர் விரலூர் நாகமலை சமணக் கற்றளி (தேவாரம்) எடுப்பித்து சமண நெறி வளர்ச்சிக்கு ஒன்பதாம் நூற்றாண்டில் அடிகோலியுள்ளார். கி.பி. 1100 - இல் ரிஷி சமுத்தாயர் திருப்பருத்திக் குன்றத்தில் கால்வாய் வெட்ட முதலாம் குலோத்துங்கனிடமிருந்து நிலம் பெற்றுள்ளார். சமணத் துறவி அகளங்க தேவர் அழபடை தாங்கியில் தங்கியிருந்த பௌத்த சமயத் துறவியுடன் காஞ்சி மாநகர் போந்து அரசன் இமசீதளன் சபையில் சமய வாதம் செய்து காஞ்சி நகரத்தை

தர்மதேவி அருளால் வெற்றி பெற்றதாகத் தெரிவித்துள்ளார். இவர் காஞ்சியிலேயே தங்கியிருந்து தவம் செய்து முக்தியடைந்துள்ளார். நன்னூல் இயற்றிய சமணரான பவணந்தி மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியில் காஞ்சியில் வசித்துள்ளார். சமணமத போதகர்கள் வாமணாச்சார்யா (எ) பரவாதி மல்லன் சமண நெறி பரப்பி காஞ்சியில் இருந்துள்ளான்.

இந்தியாவில் இடம் பெற்றுள்ள நான்கு முக்கிய சமய வித்தியா ஸ்தலங்களில் ஒன்றாக ஜைன காஞ்சியான திருப்பருத்திக்குன்றம் மகாவீரர் (எ) திரைலோக்கியநாதர் கோயில் பல்லவர்களால் தோற்றுவிக்கப்பட்டு சோழர்களால் சிறப்படைந்துள்ளது. விஜயநகர ஆட்சியாளர்களால் பராமரிக்கப் பட்டுள்ளது. முதலாம் இராஜராஜன் சமணப் பள்ளிக்கு அளித்த தானங்கள் குறித்தக் கல்வெட்டுகள் கி.பி. 1003 மற்றும் 1005 - ஆம் ஆண்டுகளில் கல்வெட்டுகளாக இடம் பெற்றுள்ளன. விக்கிரம சோழனால் 18-08-1132 - இல் பள்ளிச் சந்தமாக நிலம் வழங்கப்பட்டுள்ளது. முதலாம் குலோத்துங்கன் அக்கோயிலை கி.பி. 1115 - இல் தூங்காணை மாடம் (எ) "கஜபிருஷ்டக் கற்றளி" யாக கட்டுவித்தான். இவனின் தான செய்திகள் குறித்த கல்வெட்டுகள் கி.பி. 1091 மற்றும் 1092 - ஆம் ஆண்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் குலோத்துங்கன் கி.பி. 1200 - இல் இம்மண்டபம் கட்டியுள்ளான். ஜீனக்காஞ்சி சமணப் பள்ளிக்கு "அம்பி" என்ற ஊர் பள்ளிச் சந்தமாக்கப்பட்டுள்ளது. கி.பி. 1201- இல் போசாள பிரதானி சந்திரமௌலியின் மனைவி அச்சாம்பிகை வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளாள். கி.பி. 1218 - இல் வீமரசன் காணிப்பாக்க நிலத்தைச் சமணப் பள்ளிக்குச் சந்தமாக்கியுள்ளான். கி.பி.1243 - இல் கோப்பெருஞ்சிங்கன் தனதாட்சியில் அக்கோயில் மதில் சுவர் அமைத்துள்ளான்.

விஜயநகர வேந்தர்களில் இரண்டாம் புக்கனால் ஜீனக்காஞ்சி சமணப் பள்ளி புதுப்பிக்கப்பட்டு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. பிரம்ம தேவர் உள்ளிட்ட ஐந்து முனிகளுக்கு கருவறை எழுப்பப் பட்டன. அவனால் அக்கோயிலில் கண்ணைக் கவரும் பல வண்ண ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ளன. புக்கனின் அமைச்சர் இருகப்பா கி.பி. 1383 - இல் கோபுரம் எழுப்பியுள்ளான்.

கிருஷ்ணதேவராயனால் திரைலோக்கியநாதர் கோயிலுக்கு உவச்சேரி கிராமம் பள்ளிச் சந்தமாக வழங்கப்பட்டுள்ளது. பரவாதி மல்லனால் கோபுரம் எழுப்பப்பட்டுள்ளது.

அரசர்கள், அரச குடும்பத்தினர், சமண குருமார்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் சமண சமயச் சார்புடன் கலைகளின் வளர்ச்சிக்கும் முயற்சித்ததால் இம்மதம் "திகம்பரர்", "நாயினார்" என்ற உட்பிரிவுகளுடன் இம்மாவட்டத்தில் நிலைப் பெற்று அவர்களின் வழிவந்தோர் இன்றளவும் பல ஊர்களில் பரவலாக வசித்து வருகின்றனர்.

தொண்டை மண்டலம் பல்லவப் பேரரசர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. சமண பௌத்த சமயங்கள் அந்நிலையில் (அந்நாளில்) வெகுவாகப் பரவியிருந்தன. அச்சமயங்கள் செல்வாக்கை இழக்கச் செய்து சைவ, வைணவ சமயத்தை இப்பகுதியில் பரப்பும் பணியில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் தீவிரமாகச் செயல்பட்டுள்ளார்கள்.

## தற்போதுள்ள சமண ஊர்களும் சமணரும்

ஜினகாஞ்சி பருத்திக்குன்றங் கரந்தை பூண்டி
சிங்கைவைகை திருப்புறம்பை அருகை தாசை
சினகிரிவன் தீபைசித்தை வீரை கூடல்
செஞ்சிமுத லூரர் பேரை விழுக்கம் வேலை
கனகபுரி இளங்காடு துரக்கோல் வளத்தி
கன்னிலம்தச் சூர்குசை வாழ்நாற் பாடி
வினிலிருதூர் வெண்குன்ற மோடலை யாமூர்
விடையெய்யில் கறக்கோட்டை விளங்குங் காப்பே
என்று ஆதிநாதர் பிள்ளைப் பருவம் கூறுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சமணக் கோயில்கள் பின்வருமாறு,

## உத்திரமேரூர்

இந்த ஊர் சுந்தரவரதப் பெருமாள் கோயிலில் ஆதிநாதர் (இருஷப தேவர்) திருவுருவம் இருக்கிறது. எனவே இங்கு முற்காலத்தில் சமணர்கள் இருந்திருக்க வேண்டும்

### ஆனந்த மங்கலம்

ஆனந்த தீர்த்தங்கரரின் உருவம் உள்ளது.

### மாகறல்

ஆதிபட்டாரகர் (இருஷப தேவர்) கோயில் உள்ளது.

### ஆர்ப்பாக்கம்

மாகறலுக்கு அருகில் இவ்வூர் உள்ளது. இங்கு ஆதிநாதர் கோயில் உள்ளது.

### குன்னத்தூர்

இங்குள்ள திருநாகேஸ்வரம் கோயிலில் உள்ள சாசனம் பெரிய நாட்டுப் பெரும்பள்ளி என்னும் பள்ளியை கூறுகிறது. இது சமணப் பள்ளியாக இருக்கக் கூடும். அம்மணப்பாக்கம் என்னும் கிராமம் ஒன்று உண்டு. இப்பெயர் இங்குச் சமணர்கள் இருந்ததைக் குறிக்கின்றது.

### கீரைப்பாக்கம்

கி.பி. 9 - ஆம் நூற்றாண்டில் இவ்வூரில் உள்ள கல்வெட்டு மூலம் சமணர்கள் இங்கு வாழ்ந்துள்ளார்கள் என அறியலாம்.

### திருப்பனம்பூர்

திருப்பனம்பூர் போன்ற இடங்களில் இன்றும் சில சமணக் கோயில்கள் உள்ளன.

# சந்திரபிரபா கோயில்

சந்திரபிரபா என்னும் இக்கோயில், பெரிய கோயிலின் வடக்குப்புறத்தில் ஒரு மூலையில் உள்ள தோட்டத்தில் அமைந்துள்ளது. கிழக்குப் புற வாயிலைக் கொண்ட இக்கோயிலின் நுழைவு வாயில் குறுகலான வழியை உடையதாகக் காணப்படுகிறது. குறுகலான வழி எதிர்ச்சுவரை ஒட்டி மேலே செல்கிறது. இரண்டு பக்கத்திலும் இரு பல்லவத் தூண்கள் உள்ளன.

இக்கோயில் இராசசிம்ம பல்லவனால் கி.பி.720 - இல் எடுப்பிக்கப்பட்டுள்ளது. முதலாம் குலோத்துங்கன் கி.பி. 1092 - இல் 25 கழஞ்சு பொன்னுக்கு நிலம் கிரயம் பெற்று பள்ளிச் சந்தமாக்கியுள்ளான். கி.பி. 1116 - இல் ரிஷி சமுத்ராயருக்கு கால்வாய் வெட்ட நிலமளித்துள்ளதுடன் மகாவீரர் கோயிலை தூங்கானை மாடம் (எ) கஜபிருஷ்டக் கற்றளியாக மறுநிர்மாணம் செய்துள்ளான் 18 - 8 -1132 - ஆம் நாளில் விக்ரம சோழன் பள்ளிச் சந்த நிலங்களை ஆரம்ப நந்திக்கு கிரயமாக்கியுள்ளதுடன், விளாசை கிராமசபையினர் மூலம் இறை நீக்கி நிலமளித்துள்ளான். கி.பி. 1203 - இல் சந்திரமௌலியின் மனைவி அச்சாம்பிகை வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளார்.

மூன்றாம் குலோத்துங்கன் கி.பி. 1200-இல் மண்டபம் கட்டி புதுப்பித்துள்ளான். மூன்றாம் இராஜராஜன் கி.பி. 1223-இல் துறவியருக்கு பள்ளிச் சந்தமாக நிலமளித்துள்ளான்.கி.பி. 1234-இல் வீமரசன் காணிப்பாக்க நிலம் வழங்கியும், அவன் பணியாள் வீமவடுகன் கி.பி. 1236-இல் தானிய சேமிப்பு அறை கட்டி நெல் வழங்கியுள்ளான். செங்கதிர்ச்செல்வன் கிணறு எடுத்துள்ளான். அழகிய பல்லவன் கோப்பெருஞ்சிங்கன் கி.பி. 1243-இல் மதில்சுவர் கட்டி நெல் பராமரித்துள்ளான். விஜயநகர வேந்தன் இரண்டாம் புக்கனின் தண்டநாயகம் இருகப்பா கி.பி.1382 - இல் சங்கீத மண்டபம் கட்டி பல வண்ண ஓவியங்களையும் தீட்டியுள்ளான்.

கி.பி. 1388-இல் பிரம்ம தேவர் உள்ளிட்ட ஐந்து முனிகளுக்கு கருவறை எழுப்பப்பட்டுள்ளன. கி.பி. 1617 - இல் கிருஷ்ணதேவராயன் கிராமங்களை தானமளித்துள்ளதுடன் கி.பி. 1618-இல் 200 குழி நிலத்தை பள்ளிச் சந்தமாக்கியுள்ளான்.

வாமண குரியை போதித்த சமண குரு ஸ்ரீ புஷ்பசேனா கோபுரம் கட்டியுள்ளதுடன் இங்கே சமாதியடைந்துள்ளார். இக்கோயிலில் 8 கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

# மகாவீரர் (எ) வர்த்தமானர் கோயில்

கி.பி. 546 - ஆம் ஆண்டில் சிம்மவர்மன் இவ்வூரை சமணர்களுக்கு இருப்பிடமாக உருவாக்கியுள்ளான். சிம்ம விஷ்ணுவின் ஆட்சியில் கி.பி. 570 - இல் (கோயில்) சமணப் பள்ளி எடுக்கப்பட்டுள்ளது. கி.பி.1003 - இல் முதலாம் இராஜராஜன் சந்தி மண்டபம் கட்டி கி.பி. 1005 - ஆம் ஆண்டில் பல தானங்கள் வழங்கியுள்ளான். தொடர்ந்து முதலாம் குலோத்துங்கன் கி.பி. 1091 - இல் கஜ பிருஷ்டமாக இக்கோயிலைக் கட்டி திருப்பணி செய்துள்ளான். விஜய நகர வேந்தர்களில் புக்கன் கி.பி.1380- இல் வம்ச குறிப்புகளை விவரித்து பராமரித்துள்ளதுடன். கி.பி.1383 -இல் தண்டநாயகம் இருகப்பாவால் பல தானங்கள் வழங்கப்பட்டுள்ளன. கி.பி.1518-ஆம் ஆண்டில் கிருஷ்ணதேவராயன் சில கிராமங்களை பள்ளிச் சந்தமாக்கி வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளான். இச்செய்திகள் இங்குள்ள 6 கல்வெட்டுகளில் விவரிக்கப் பட்டுள்ளன.

இந்தியாவில் இடம் பெற்றுள்ள 4 வித்தியா ஸ்தானங்களில் முதன்மையாகப் போற்றப்படும் இச்சமணப் பள்ளியை "வர்த்தமானீஸ்வரம்" என்று மகாவீரருக்கு சிம்மவர்மன் கருவறை அமைத்த பின்னர், முதல் தொகுதியில் பஷ்யந்தர், தருமதேவர், இடம் பெற்றுள்ள பகுதி "திரைலோக்கியம்" எனப்படுகிறது. பத்ம பிரபா, வாசுபூஜ்யர், பார்சுவநாதர் இடம் பெற்றுள்ள பகுதி "திரிகூட பஸ்தி" என்று குறிப்பிடப்படுகிறது. இத்துடன் மகாமண்டபம், பலிபீடம், மானஸ்தம்பம் ஆகியவை இடம்பெற்றுள்ளன. திருச்சுற்று மதிலுக்கருகே பிரம்மதேவர், ரிஷபதேவர் கருவறை, முனிவாச மண்டபம், தானிய சேமிப்பு அறை, தல விருட்சமாக மேடையுடன்

"குராமரம்" அமையப் பெற்றுள்ளன. கிழக்கில் 3 நிலை கோபுரத்துடன் சமணம் தழைத்தோங்க கலங்கரை விளக்கமாக காலத்தை வென்று காட்சியளிக்கும் இக்கோயில் நன்கு பராமரிக்கப்பட்டு வழிபாடுகள் தொடர்கின்றன.

ஐஐஐஐ

# குராமரம்

திருப்பருத்திக் குன்றத்திலுள்ள திரைலோக்கிய நாதர் கோயிலுக்குரிய தலவிருட்சம் குராமரமாகும். வர்த்தமானர் கருவறைக்குப் பின் பக்கத்தில் காணப்படும் இம் மரத்தைச் சுற்றிலும் கி.பி. 13 - ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் காடவர் குலக் கோப்பெருஞ்சிங்கனால் மேடை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மேடையில் அப்போது பாடல் ஒன்று பொறிக்கப்பட்டிருக்கிறது. தல விருட்சமாகிய குராமரத்தைப் புகழ்ந்து கூறும் இப்பாடல் நான்கு வரிகளைக் கொண்டதாகும்.

"ஸ்வஸ்தி ஸ்ரீ

தன்னளவிற் குன்றா துயராத தண்காஞ்சி

முன்னுளது மும்முனிவர் மூழ்கியது - மன்னவன்தன்

செங்கோல் நலங்காட்டும் தென்பருத்திக் குன்றமர்ந்த

கொங்கார் தருமக் குரா"

என்பதாகும்.

இக்குராமரம் அதிக உயரம் வளராமலும் குட்டையாக குறுகாமலும் ஒரே சீரான உயரத்தை உடைய்யதாக இருக்கும் தன்மை உடையதாகும். காஞ்சி மாநகருக்கு முன்பாக அமைந்துள்ள இத்தலத்தில் மூன்று தீர்த்தங்கரர்களது கருவறைகளுக்கு அருகில் நிற்பதாகும். நாட்டைக் காக்கும் மன்னவனது செங்கோலின் சீர்மையை அறிவுறுத்தும் வகையில் நிலைத்து நிற்கும் தன்மை கொண்டது. இத்தகைய சிறப்பு மிக்க குராமரம் தருமத்தின் உறைவிடமாகத் திகழ்ந்து தென்பருத்திக்குன்றத்தில் நிற்கின்றது என இந்தப்பாடல் குராமரத்தின் பெருமையைப் போற்றிப் புகழ்வதைக் காணலாம்.

# கல்வெட்டுச் செய்திகள்

திரைலோக்கியநாதர் சுவாமி கோயில் கோபுர வாயிலின் வலதுபுற அதிட்டானத்தில் உள்ளது. விஜயநகர மன்னர் வேங்கடபதி தேவ மகாராயர் காலத்திய கல்வெட்டு சுக்கில ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் ஜினக் காஞ்சியில் உள்ள திரைலோக்கியநாதசுவாமி வழிபாட்டிற்கு 2000 குழி நிலம் சர்வமானியமாக வழங்கப்பட்டதைக் குறிக்கிறது. அடுத்து திரைலோக்கியநாதர் சுவாமி கோயில் கோபுர வாயிலின் நிலைக்கால் உத்திரப்பகுதியில் உள்ளது. இக்கல்வெட்டு கூறும் செய்தியாவது மல்லிசேனா வாமனசூரி என்பவரி மாணாக்கர் ஸ்ரீ புஷ்பசேனா வாமனாதியா என்ற முனிவர் இந்த கோபுரத்தைக் கட்டுவித்தார் என்பதைக் குறிக்கிறது. புஷ்பசேனருக்கு பரவாதிமல்லர் என்ற குடும்பப் பெயர் காணப்படுகிறது. மேலும் கருவறையின் முன்மண்டபத்திலுள்ள உத்திரங்களில் இந்தக் கல்வெட்டு காணப்படுகிறது. அதில் மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட திரிபுவனச்சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழனின் 22 - ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு ஆகும். இம்மண்டபம் புதுப்பித்துக் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. கற்கள் இடம்மாறி அடுக்கப்பட்டுள்ளன. விக்கிரமசோழன் காலத்தில் 25 கழஞ்சு பொன்னுக்கு ஒரு நிலம் வரிநீக்கி திருப்பருத்திக்குன்ற ஆழ்வார்க்கு விற்கப்பட்டதாகக் குறிக்கப்படுகிறது. மேலும் மதுராந்தகன் மாடை என்ற காசின் பெயரும் காணப்படுகிறது. (மதுராந்தகன் என்பவன் தெலுங்கு பொத்தப்பி சோழன் ஆவான்).

இக்கோயில் வரிமானாச்சாரியர் மல்லிச் சேனாச்சாரியர் ஆகியோருக்குரிய பலிபீடத்தின் மீது இக்கல்வெட்டுக் காணப்படுகிறது. அதில் சோழர் கால கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டு வாமானாச்சாரிய மல்லிசேன முனிவரைப் போற்றுவதாக உள்ளது. வேறெரு கல்வெட்டு திரிபுவனச சக்கரவர்த்திகள் பரகேசரி வர்மரான

விக்கிரம சோழனின் 13 -ஆவது ஆட்சியாண்டு ஆவணி மாதம் வியாழக்கிழமை பெற்ற அனுச நட்சத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் தொடக்க வரிகள் பிற்காலக் கட்டடப்பகுதியில் மறைந்துள்ளன. இடையிடையே பிற்காலத் தூண்கள் கல்வெட்டை மறைந்துள்ளன. பூமாலை முடைந்து . . . . . . என்று தொடங்கும் மெய்க்கீர்த்திகளின் பகுதிகள் காணப்படுகின்றன. ஜெயங்கொண்ட சோழமண்டலத்து காலியூர் கோட்டத்து விற்பேடு நாட்டு குவலையதிலகு சதுர்வேதிமங்கலமான விழசார் சபையின் சமணக் கோயிலுக்கு வரிவிலக்குடன் நிலம் விற்றுக் கொடுத்ததை இக்கல்வெட்டு பதிவு செய்துள்ளது. இக்கல்வெட்டுப் பகுதியை அடுத்து மேலும் விக்கிரம சோழனின் 17-ஆவது ஆட்சியாண்டில் செய்யப்பட்ட மற்றொரு நில விற்பனையும் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது. அறம்ப நந்திக்கு, விற்பேட்டு நாட்டு பள்ளிச் சந்தமாக திருப்பருத்திக் குன்றத்தில் உள்ள ஒரு நிலம் விற்பனை செய்யப்பட்டதும் இக்கல்வெட்டில் காணப்படுகிறது. மேலும் அதே அந்தரான மண்டபத்திலுள்ள மற்றொரு உத்திரத்திலுள்ள கல்வெட்டு. திரிபுவனச் சக்ரவர்த்திகள் இராசகேசரி வர்மரான குலோத்துங்க சோழ தேவனின் 46-ஆவது ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட தமிழ்க் கல்வெட்டு புகழ் சூழ்ந்த புணரி . . . . . . என்ற மெய்க்கீர்த்திப் பாடலுடன் தொடங்குகிறது. ஆஸ்தி வர்ம சதுர்வேதி மங்கலமான கைதடுப்பூர் சபையார் திருப்பருத்திக் குன்று ரிஷி சமுதாயத்தாருக்கு வாய்க்கால் வெட்டிக் கொள்வதற்காக ஒரு குறிப்பிட்ட நிலத்தை வரி விலக்குச் செய்து விற்பனை செய்த செய்தி இடம்பெற்றுள்ளது. அடுத்து கோயில் மதிற்சுவரின் கிழக்குப் பகுதியில் உள்ள கல்வெட்டு திரிபுவனச்சக்ரவத்தி ராஜகேசரி வர்மரான குலோத்துங்க சோழனின் 46-ஆவது ஆட்சியாண்டு தமிழ்க் கல்வெட்டு ஆகும். அழகிய பல்லவன் என்பவன் இம்மதிலை எடுப்பித்தான் என்று குறிப்பிடுகிறது.

திருப்பருத்திக்குன்ற சமணக் கோயிலில் பொருட்கள் வைக்கும் அறையின் வடக்குச் சுவரில் உள்ளது. இக்கல்வெட்டு, இராஜராஜசோழனின் 20 - ஆவது ஆட்சி ஆண்டில் வெட்டப்பட்டுள்ளது.

இக்கோயில் இறைவனுக்கு (நாயினார்க்கு) அதிகாலை வழிபாட்டிற்கு (திருப்பள்ளி எழுச்சி) அமுது படைக்கும் பொருட்டு தியாக சமுத்திர பட்டையார்க்கு வெற்றிலைப் பாக்கு மடித்துக் கொடுத்து (அடைக்காய் அமுது) பிராமணன் விமலன் என்பவன் நெல்மலியிலுள்ள மகத்தல் ஏத்தல் என்ற நிலத்தின் கடமை வருவாயை கொடுத்தமை சொல்லப்படுகிறது. கடமை வரி மூலம் கிடைத்த நெல்லினைக் கொண்டு இம் மண்டபத்தினையும் செய்வித்தான் என்ற செய்தியும் மற்றொரு கல்வெட்டு முன் மண்டப நடைமாளிகையின் அதிட்டானத்தில் உள்ளது மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட திரிபுவனச் சக்கரவத்திகள் குலோத்துங்க சோழ தேவனின் 21 - ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு. கல்வெட்டின் சில பகுதிகள் சிதைந்துள்ளன. பின்பகுதி கிடைக்கவில்லை. அரசனுக்கு ராஜகாரியம் பார்க்கின்ற மண்டியங்கிழான் குலோத்துங்க சோழ காடுவெட்டிகள் அரசனை தொழுதபோது அரசன் உனக்கு வேண்டியவற்றைக் கேள் என்று மனமுவந்து ஆணையிட்டான். அப்போது மண்டியங்கிழானும் அவனது குருவான சந்திரகீர்த்தி தேவரின் பொருட்டு வேண்டுவதாகக் குறிப்பிட்டு திருப்பருத்திக்குன்ற இறைவனுக்கு 20 வேலி நிலம் தானமாக வேண்டினான். மன்னன் (இறைவனுக்கு) கோட்டையூர் ஆசிரியன் என்ற பட்டம் கொடுத்து அம்பை என்னும் இடத்தில் 20 வேலி நிலம் கொடுப்பதாக வாய்முக ஆணை (திருமுக பிரசாதம்) வழங்கினான் இந்த வாய்மூல ஆணைப்படி இக்கல்வெட்டு வெட்டப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வெட்டின் அடுத்தப்பகுதி இம்மன்னனின் 21 - ஆவது ஆட்சியாண்டு முதல் திருப்பருத்திக்குன்ற வாரியப் பெருமக்களுக்கு அம்பையில் 20 வேலி நிலம் இறையிலி பள்ளிச் சந்தமாக கொடுத்ததை குறிப்பிடுகிறது. மேலும் திருப்பருத்திக்குன்றம் செயங்கொண்ட சோழமண்டலத்து காலியூர்க் கோட்டத்து திருப்பருத்திக்குன்றம் என்று சொல்லப்படுகிறது.

இக்கோயில் சந்திமண்டபத்தின் மேற்குச் சுவரில் உள்ள கல்வெட்டு (இக்கல்வெட்டில் மன்னன் பெயர் ஆட்சியாண்டு குறிப்பிடப்படவில்லை) இராஜராஜசோழனின் 18 - ஆவது

ஆட்சியாண்டாகும். இதில் திருப்பருத்திக்குன்றத்திலுள்ள செம்பொற்குன்று ஆழ்வார் என்ற இறைவனுக்கு காலியூர்கோட்டத்து விற்பேட்டு நாட்டு காணிப்பாக்கத்தில் வழங்கப்பட்ட பள்ளிச்சந்த நிலங்கள் நெடுநாட்கள் பயன்படாமல் இருந்தன என்றும் தியாக சமுத்திரப்பட்டடையரான வீமரசர் இராஜராஜனின் 18 - ஆவது ஆட்சியாண்டு முதல் பள்ளிச் சந்தமாக தருமம் செய்து கொடுத்தார் என்றும் சொல்லப்படுகிறது. வீமரசர் ஊராக காணிப்பாக்கம் குறிக்கப்பட்டுள்ளது. மற்றொரு கல்வெட்டு சந்தி மண்டப வாயிலின் வலதுபுறம் உள்ளது. விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவமகாராயர் கல்வெட்டு சக வருடம் 1440 (கி.பி. 1518) இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு வெகுதானிய வருடம் தமிழ் மாதம் மார்கழி (தனு) தேய்பிறை (அமரபட்சம்) சப்தமும் (7 ஆம் தேதி) ஞாயிற்றுக் கிழமை (ஆதித்தவாரம்) பூச நட்சத்திரம் பெற்ற நாளில் இக்கல்வெட்டு ஆவணம் எழுதவும், அதில் இவ்வூர் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து எயில் நாட்டு நகரம் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த திருப்பருத்திக்குன்றம் என்று சொல்லப்பட்டுள்ளது. இவ்வூர் திரைலோக்கியநாதர் கோயிலைச் சார்ந்த ஸ்ரீ பண்டாரத்து தலைவர் (குருக்கள்) அநந்தவீர வாமணமுனிவர் கோயில் தானத்தாரில் ஒருவரான பொற்குன்றகிழார் தேவாதி தேவர் மற்றும் சிலரும் சேர்ந்து காஞ்சிபுரம் நகரத்தில் இருந்த சேவகப் பெருமாள் மகன் அரியரபுத்திரர்க்கு கரை மற்றும் மனை விற்றுக் கொடுத்து விலை ஆவணம் எழுதிய செய்தியாக இக்கல்வெட்டு உள்ளது.

நிலங்கள் மேல் வாரப்பற்று பாதிவாரப்பற்று என்று குறிப்பிட்டு 240 மற்றும் 1363 (குழி) என்ற நில அளவுகள் பட்டியல் போன்று சொல்லப்படுகின்றன. மொத்தம் 3 கரைகள் விளக்கப்படுகின்றன. நிலங்கள் கீழைகுண்டிகைச் செறு மேலைக் குண்டிகைச் செறு என்று பெயரிட்டு காட்டப்படுகின்றன. கொடுக்கப்பட்ட மனை கிழக்கு மேற்காக 200 அடி இருந்தது இதன் எல்லையாக மேற்கில் திருவானை மனையின் கிழக்கில் அவையம் புக்கார் மனையும். வடக்கில் திருவீதியும் தெற்கில் ஆற்றுக்கால் கரையும் இருந்தன. இம்மனையும் இதனுள் அடங்கிய கிணறும் பசலை மரங்களும் ஒன்று சேர விலை 120 பணம் என்றும் சொல்லப்படுகின்றது. இப்படி விற்கப்பட்ட கரை மற்றும் மனைகள்

மீது பின்னாளில் வில்லங்கம் (கலன் - பிரச்சனை) ஏற்பட்டால் (தொற்றுப்படின்) விற்றவர்களே தீர்த்துக் கொடுப்பதாக உறுதி சொல்லியுள்ளனர். இப்படிக் கொடுக்கப்பட்ட நிலத்தின் தன்மைகளுக்கு ஏற்ப வார அளவு சொல்லப்பட்டுள்ளது.

1. கமுகு (பாக்கு) வைத்த நிலம் - வாரம் இரண்டு பங்கு கழித்து மேல் வாரம் இரண்டு
2. தென்னை மரம் மற்றும் பசலை மரம் உள்ள நிலம் - குடிவாரம் 3 பங்கு கழித்து மேல்வாரம் 1 பங்கு
3. வான்பயிர் நஞ்சை புஞ்சை நிலம் - ஒன்றில் முக்கால்
4. கடாரம் ஒன்றிற்கு - 250

மேலும் ஊர் விநியோகம் எச்சோறு, ஒட்டுச் சோறு ஆகியவை கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளனர். நெட்டமஞ்சி, குற்றமஞ்சி (பெரிய சிறிய இலவசப் பணி) சர்வமானியமாகக் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளனர். இறுதியில் அநந்த வீரிய வாமன முனிவர் கரந்தை புஷ்பசேன முனிவர் பொற்குன்றக் கிழார் தேவாதி தேவன் கண்ணமுளார் கல்லோயச் சந்தன் ஆகியோர் கையொப்பம் (எழுத்து) இட்டுள்ளனர். இந்த ஆவணத்தை கொட்டுழார் நயினான் என்பவன் தயார் செய்ததாக கையொப்பம் இட்டுள்ளான். மேலும் இக்கோயில் தீபக் கம்பம் மண்டப விதானத்தில் உள்ள இரண்டு கல்வெட்டுகள் விஜயநகர மன்னனின் இரண்டாம் புக்கனது கல்வெட்டு ஆகும். (இவற்றின் முக்கியத்துவம் கருதி Epigraphia Indica vol - vii -இல் முன்னுரை ஆங்கிலத்தில் எழுதப்பட்டு கல்வெட்டு வாசகம் ஆங்கிலமொழி பெயர்ப்பு மற்றும் வரலாற்றுக் குறிப்புகளுடன் வெளியிடப்பட்டுள்ளன.)

அவற்றில் முதல் கல்வெட்டு (எண் 15) இல் இக்கோயிலின் முன்பாக உள்ள தீப கம்பத்தில் வெட்டப்பட்டது இரண்டாம் அரியராயனின் கல்வெட்டாகும். தமிழ் வருடம் துந்துபி ஆண்டில் கார்த்திகை மாதம் வளர்பிறை கார்த்திகை நட்சத்திரம் பெற்ற திங்கட்கிழமை கூடிய பௌர்ணமி நாளில் வெட்டப்பட்டதாகும். அரியராயரின் மகன் புக்கராயரின் தர்மமாக வைச்சிய தண்டநாயக்கனின் மகன் இருகப்பா மகாப்பிரதாணி கொடுத்த

கொடை பற்றிய இவன் ஜினோத்தமன் என்று (சமணர்களில் சிறந்தவன்) பெருமையாக கூறப்படுகிறான். இவன் திரைலோக்கியநாத வல்லபரின் பூசை மற்றும் திருப்பணிக்காக மாமண்டூர், பற்றில்மகேந்திர மங்கலம் என்ற ஊரில் நான்கு எல்லைகளுக்கும் உட்பட்ட நிலங்களை இறையிலி பள்ளிச்சந்தமாக கொடுத்துள்ளான்.

இத்தர்மம் சூரியன் சந்திரன் இருக்கும் வரை நிலைக்கும் என்று குறிப்பிட்டார். (தர்மம் வெல்லும் தர்மோஞ்ஜெயது) இக்கல்வெட்டைப் பதித்த ஹூல்ட்ச் கர்நாடக மாநிலம் சரவண பெல்கோலாவில் உள்ள கல்வெட்டில் இந்த இருகப்பன் படைத்தளபதி சைச்சப்பா என்பவனின் மகனாகக் குறிப்பிடப்படுவதாகவும், தந்தை புக்கராயருக்கு அமைச்சர் என்றும் மகன் இருகன் அரியரருக்கு அமைச்சர் மற்றும் தளபதி என்றும் குறிப்புத் தந்துள்ளார். அடுத்து இக்கோயில் மண்டப விதானத்தில் கிரந்த எழுத்தில் இக்கல்வெட்டு பாடல் வடிவில் வெட்டப்பட்டுள்ளது. இந்த சமஸ்கிருத ஸ்லோகம் "சார்துல விக்ரதிதி" என்ற அமைப்பில் அமைந்த ஸ்லோகம் ஆகும். இக்கல்வெட்டு உள்ள மண்டபம் படைத்தலைவன் வைச்சயன் மகன் இருகப்பனால் கட்டப்பட்டது என்று சொல்கிறது. இதனில் பிரபவ வருடம் (கி.பி. 1366) குறிக்கப்பட்டுள்ளது. தளபதி வைச்சனின் மகன் புனிதமான காஞ்சியில் உள்ளவர்த்தமான சேத்திரத்தில் தனது குருநாதர் புஷ்பசேனரின் ஆணைக்கு இயங்க இம்மண்டபத்தை கல்லால் அமைத்து கற்களால் கூரையும் வேய்ந்தான் என்று பாடல் வடிவில் இக்கல்வெட்டு உள்ளது.

# ஓவியங்கள்

பல்லவர் காலத்திலிருந்தே திருப்பருத்திக்குன்றம் சமண சமய தலமாக விளங்கியதையும் இங்குள்ள கோயிலுக்குப் பல்லவப் பேரரசனாகிய சிம்மவிஷ்ணு தானம் வழங்கிய செய்தியையும் பள்ளங் கோயில் செப்பேட்டினால் அறிய முடிகிறது. இக்கோயிலில் விசயநகர மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட முகமண்டபம், சங்கீத மண்டபம் ஆகியவற்றின் மேற்கூரைகளில் வரிசை வரிசையாக ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பதைக் காணலாம். இவற்றின் அடிப்பகுதியில் அவை என்னென்ன நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றன என்பதன் விளக்கங்கள் தமிழ்மொழியில் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இக்கோயிலிலுள்ள ஓவியங்கள் காலப்போக்கினால் சிதைந்து காணப்படுகின்றன. இங்குள்ள விசயநகர கால ஓவியங்கள் முக்கியமாக சமண தீர்த்தங்கர்களாகிய ரிஷபநாதர், வர்த்தமான மகாவீரர், நேமிநாதர் முதலியோரது வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிப்பனவாக உள்ளன. இவையன்றி அம்பிகா யக்ஷியின் வாழ்க்கையினை விளக்கும் ஓவியங்களும் இருவரிசைகளாகத் தீட்டப்பட்டுள்ளன.

ரிஷபநாதரது வாழ்க்கையினைச் சித்தரிக்கும் முதற் தொகுதியில் சிம்மபுரிமன்னனாகிய ஸ்ரீசேனனும் அவனது பட்டத்தரசியாகிய சுந்தரியும் இனிது வீற்றிருப்பதைக் காணலாம். அடுத்து மன்னனது இரண்டாவது மைந்தனாகிய ஸ்ரீ வர்மனுக்கு பட்டம் சூட்டப்படுவதும் முதல் மைந்தனாகிய ஜெயவர்மன் சுவயம்பிரபா என்னும் சமண முனிவரது அறவுரையால் துறவற வாழ்க்கையை மேற் கொள்வதும் தீட்டப்பட்டுள்ளன. ஜெயவர்மன் அரச ஆடைகள் மணிமகுடம் ஆகியவற்றைத் துறந்து மரத்தடியில் வீற்றிருக்கும் மாமுனிவர் சுவயம்பிரபாவனை வணங்கிய வண்ணம் உள்ளார். அரச வாழ்வைத் துறந்து துறவறம் பூண்டு இனிமையான எண்ணங்களை நினைவில் கொண்டமையால் அருகிலுள்ள

புற்றிலிருந்த பாம்பொன்றினால் கடித்து இறந்துவிடுகிறான். இதனை ஜெயவர்மனுக்கு அருகில் படம் விரித்த நிலையில் சீற்றத்தோடு நோக்கும் பாம்பு உணர்த்துகிறது.

அடுத்துள்ள ஓவியம் மரணமெய்திய ஜெயவர்மன் மறு பிறப்பில் மகாபரன் என்னும் வித்தியாத மன்னனாகப் பிறந்து அரசோச்சுவதையும், பின்னர் அவனது வாழ்வின் இறுதி காலத்தில் மெய்ஞான வழியடைய சித்திரக் கூடத்திலுள்ள சமணக் கோயிலை வணங்கி எட்டுவகை விரதங்களை மேற்கொள்வதையும் குறிக்கின்றது. மற்றொரு பகுதியிலுள்ள ஓவியங்கள் மகாபலன் அடுத்துவரும் யுகங்களில் லலிதாங்கன், வஜ்ரசங்கன் ஆகியவர்களாகப் பிறந்தது பற்றியதாகும். இதனையடுத்தாற் போன்று வஜ்ரசங்கனும் அவனது மனைவியும் இரு சமண முனிவர்களிடம் அறம்கேட்டமை அழகுறக் காட்சியளிக்கின்றது. வஜ்ரநாபியாக மறுபிறவி எடுத்த ஜெயவர்த்தனன் தன் அரசியருடன் அமர்ந்த வண்ணமும் அவனது வணிக நண்பர்களாகிய அபராசிதன், ஜயந்தன் ஆகியோர் யானையின் மேல் செல்வதாகவும் இன்னும் சிலர் குதிரை மேலிருந்து செல்வதாகவும் அடுத்தடுத்து ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இறுதியில் வஜ்ரநாபி தவமியற்றித் தன்னுயிரை மாய்த்தமையை காணலாம். இவற்றிற்கு அடுத்துள்ள தொகுதியில் ரிஷபதேவனின் தந்தையான நாபி மகாராஜன் தாய் மருதேவியார் ஆகியோர் ஓவியங்களும், மருதேவியார் துயிலும் போது கண்ட கனவில் தோன்றிய யானை, எருது, சிங்கம், கஜலட்சுமி, மலர், மாலைகள் சந்திரன், சூரியன், மீன், கடல், தாமரை, தடாகம், கலசங்கள், இரதம், சிம்மசானம் முதலியவற்றின் ஓவியங்களும் உள்ளன. இவையனைத்தும் ரிஷபநாதர் பிறப்பதற்குரிய நன்னிமிர்த்தச் சின்னங்கள் என்பதனை விளக்குவனவாகும். பின்னர் கருவுற்ற அரசி ரிஷபதேவரை ஈன்றெடுத்தல், பிறந்த குழந்தையினை இந்திரனின் ஐராவதத்தின் மீதேறிச் சென்று காணுதல் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

இளமைப் பருவம் எய்திய ரிஷபநாதர் தன் பெற்றோர்களது விருப்பத்திற்கிணங்க திருமணம் முடித்து, அரசோச்சும் உரிமையும் பெற்று திரைலோக்கியநாதர் என்னும் பெயர் பெற்றார். ஆனால் சிறிது காலத்தில் இல்லற வாழ்வில் வெறுப்புற்ற ரிஷபதேவர் சுதர்சனம் என்னும் விமானத்தில் ஏறி கானகம் நோக்கிப் புறப்பட்ட சித்தாந்தவனத்திலுள்ள ஆலமரத்தடியினில் அமர்ந்து தவம் புரிகிறார். துறவறம் பூண்ட ரிஷபநாதரிடம் அவரது மைந்தர்கள் நாட்டினைத் தங்களுக்கு வழங்குமாறு கேட்டால் அஸ்தினாபுரத்தை ஆண்ட சோமபிரபா என்னும் மன்னன் கண்ட நற்கனவும் ரிஷபநாதர் அஸ்தினாபுரிக்குச் செல்லுதல் அரசன் அவரை வரவேற்று உணவளித்தல், மறுபடியும் ரிஷபநாதர் காட்டிற்குச் சென்று கடுநோன்பினைப் பற்றித் தன் ஊனுடம்பை ஒழித்தல் முதலியன பற்றிய ஓவியங்கள் வரிசையாக காணப்படுகின்றன. இவற்றை ஒட்டி சமவசரணம் என்னும் இயற்கையான தாமரைத் தடாகக் காட்சி எழிலுடன் திகழ்கிறது.

வர்த்தமானரது வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் ஓவியங்கள் இருபத்தேழு வரிசைகளாகக் காணப்படுகின்றன. வர்த்தமானவர் பிறப்பதற்கு முன்னர் அவரது தாய் கண்ட கனவு, வர்த்தமானர் பிறப்பு, அக் குழந்தையை இந்திரன் காணச் செல்லுதல், பிறப்பின் மகிழ்ச்சியால் நாட்டியமாடும் மகளிர், மகா வீரர் துறவறம் நோற்றல், தவமியற்றியதற்காக நாதாண்டா என்னும் வனத்தை அடைதல், தவமியற்றுதல், முதலியன அழகுறத் திகழ்கின்றன. இப்பகுதியில் வர்த்தமானரது தோற்றத்தால் மகிழ்வுற்று நடனமாடும் மங்கையர். தாள ஒலியினை எழுப்பும் பிற இசைக் கலைஞர்கள் ஆகியோரது ஓவியங்களும், சிறப்பு மிக்கவையாகும். வர்த்தமானரது வாழ்க்கையைச் சித்தரிக்கும் சில ஓவியங்களும், ரிஷபநாதர் பிறப்பு, துறவறம் பூணுதல் முதலியன பற்றிய சில சித்திரங்களும் ஒத்த அம்சங்களை உடையனவாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வோவியங்களுக்கு அடுத்தாற்போன்று நேமிநாதர், கிருஷ்ணன் ஆகியோரது வாழ்க்கை வரலாற்றினை விளக்கும் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. வைணவ சமயத்தில் கிருஷ்ணனுக்கு முக்கிய இடமளித்திருப்பது போன்று சமணத்திலும் கிருஷ்ணன் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கம்சமன்னன் அவனது தங்கையாகிய தேவகிக்கும் வாசுதேவருக்கும் நடந்த திருமணம் தேவகிக்குக் கண்ணன் பிறந்தமை, கண்ணனைக் கொல்லுதற் பொருட்டு கம்சன் எடுத்த முயற்சிகள், அவற்றைக் கண்ணபிரான் வெல்லுதல், குன்றெடுத்து கோவலர்களையும் ஆநிரைகளையும் காத்தல், தன்னைக் கொல்லவந்த யானையுடன் போரிடுதல், பாம்பினை அடக்குதல், மல்லர்களுடன் சண்டையிடுதல், கம்சனை அழித்தல் முதலியன சிறப்புமிக்கவை யாகும். அடுத்து நேமிநாதர் பிறப்பு, வளர்ப்பு, உலக வாழ்க்கையினைச் சித்தரிக்கும் ஓவியங்கள் காணப்படுகின்றன. இவ்வோவியங்களில் சிலவும் வர்த்தமானரின் வாழ்க்கையினைச் சித்தரிக்கும் ஓவியங்களைப் போன்று காணப்படுவது ஒரு சிறப்பம்சமாகும். இறுதியாக தமிழகத்தில் சிறப்புற வழிபடப்பட்டு வந்த யக்ஷிகளுள் ஒன்றாகிய தர்மதேவி என அழைக்கப்பெறும் அம்பிகாவின் வாழ்க்கை வரலாறும் சைனகாஞ்சி கோயில் மண்டபத்தில் இரண்டு வரிசைகளாகத் தீட்டப்பெற்றுள்ளன.

இம்மண்டபத்தில் "காமவள்ளி" என்னும் கொடி பொன்னால் செய்யப்பட்டு, காண்போர் கண்களைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது. அக்கொடியில் அரும்பு, மலர், தளிர் ஆகியவை இயற்கையாக அமைந்தது போல் அமைக்கப்பட்டிருந்தன. அக்கொடிக்கு அருகில் கோணங்கள், சந்தி ஆகியவை அமைந்த தோரணங்கள் பொன்னால் செய்யப்பட்டிருந்தன. முத்து மாலைகள், நீலமணிகள், திரண்ட, மாலைகள் ஆகியவை மண்டபத்தை அழகு செய்தன.

இங்கு விவரிக்கப்பட்டுள்ள அருகர் கோயிலின் அமைப்பு சமண மரபில் கூறப்பெறும் "சமாகரணம்" என்ற அமைப்போடு ஒப்பிடத்தக்கதாய் உள்ளது. சமாசரணம் உயிர்கள் அனைத்தும் ஓரிடத்தில் அமர்ந்து தீர்த்தங்கரருடைய இறுதிச்சொற்பொழிவைக் கேட்பதற்குத் தகுந்த வகையில் அமைக்கப்பட்டிருந்தது.

வரைவதாகிய கலையாகும். பெருங்கதை ஆசிரியர் பிற கலைகளைக் காட்டிலும் ஓவியக் கலையைப் பல்வேறு இடங்களில் விவரித்துள்ளதைக் காணமுடிகிறது. கொங்கு வேளிர் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் ஓவியக்கலையின் சிறப்பினை விளக்கியுள்ளார். ஈண்டு ஓவியக் கூடம், கோயில் ஓவியங்கள் ஓவியங்களின் உட்கோள், உதயணின் ஓவிய ஆற்றல், கணையாழியில் ஓவியம் என்கிற உட்தலைப்புகளில் ஆய்வு செய்யப்பெறுகின்றது.

## ஓவியக் கூடம்

அக்காலத்தில் "எழுதுவினைக் கம்மம்" என்று கூறப்படும் ஓவியத் தொழிற்கூடங்கள் மிகுதியாக இருந்ததைப் பெருங்கதை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அந்த ஓவியக் கூடங்களில் ஓவியர்கள் ஓவியங்களை வரைந்து விற்று வந்தனர். அருகன் கோயிலில் வரையப்பட்டிருந்த ஓவியங்களைப் பற்றியும் கொங்குவேளிர் விவரித்துள்ளனர்.

காஞ்சியில் உள்ள ஓவியங்கள் வரிசை சரியாகவும் அமைப்பில் சிறியனவாகவும் வடிக்கப்பட்டுள்ளன. மானிட உருவங்களைக் குறிக்கும் ஓவியங்கள் பல ஒருபுறம் நோக்கியவையாகவும், அவற்றின் மூக்கு சற்று கூர்மையாகவும், கண்கள் நன்கு ஒளியுடன் தீட்டப்பெற்றனவாகவும் விசயநகர கால சிற்பங்களின் அமைப்புகளை உடையனவாகவும் இருக்கின்றன. இவற்றில் ஆடை அலங்காரம் முதலியவற்றை அறிந்துகொள்ள சிற்பங்களைப் போன்றே இவ்வோவியங்களும் துணைபுரிகின்றன.

திருப்பருத்திக்குன்றம், திருமலை ஆகிய ஊர்களில் சமாசரண அமைப்பு ஓவியத்திலும் தீட்டிக் காட்டப்பட்டுள்ளது. அவை நான்கு புறவாயில்கள் உடையதாக வட்டவடிவில் அமைக்கபட்டிருக்கும். திருப்பருத்திக்குன்ற ஓவியத்தில் முழுமையான சமாசரண அமைப்பைக் காண முடிகிறது. இச்சமாசரணத்தில் நான்கு புறவாயில்களிலிருந்தும் தீர்த்தங்கரர் அமர்ந்துள்ள மேடைக்குப் படிக்கட்டுக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த மேடையில் அழகிய அரியணை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. சமாசரணம் பற்றிப் பெருங்கதை ஆசிரியர் பின்வருமாறு விவரித்துள்ளார்.

"கண்டோர் விரும்பத்தக்க பேரழகுடைய பெரியமலையிலே புகுவதற்கு முயற்சி செய்கின்ற அரிமா சிறிது சோம்பல் தீர நிமிர்வது போலவும், அழகு பெற்றுக் கூரிய பற்கள் அமைந்தனவாக வயிர மணிகள் இயற்றப் பெற்ற வாயினையும் சுடர் விளங்கும் கண்களையும், பவழத்தால் செய்த நாவினையும் பச்சை மணியால் இயற்றப் பெற்ற பரந்த செவியினையும், பல மணிகளால் இயற்றப்பெற்ற பிடரி மயிரினையும், பிடி போன்ற திரண்ட இடையினையும் உடையனவனாய் அமைக்கப்பட்டிருந்தன அழகிய மணிகளால் கால்கள் உருவாக்கப்பட்டிருந்தன. எதிரில் நிற்பவர்கள் தம் நிழல் உருவத்தைக் காட்டும் பொன்னால் இயற்றப் பெற்ற பொற்கட்டிலில் சினத்தீயால் காண்போரை அஞ்சச் செய்யும் அரிமாக்கள் உச்சியில் சுமந்து கொண்டிருக்கும் தருமாசனத்தை அங்கு அமைத்துள்ளனர். அத்தருமாசனத்தின் மேல் தீர்த்தங்கரருடைய உருவம் அழகாக வடிக்கப்பட்டிருந்தது. அதற்கு அருகில் "கிம்புரி" என்ற பறவையால் கௌவப்பட்ட கண்ணாடி ஒளிமணி பதித்து ஒப்பனை செய்யப்பட்டதாக இருந்தது" என்பதாகும்.

## ஓவியக்கலை

ஓவியம் எனின் அழகு என்று பொருள் கொள்ளலாம். எழுத்து என்பதற்கு ஓவியம் என்பது பொருள். ஓவியம் சுவர், துணி, காகிதம், கண்ணாடி, உலோகம் போன்ற ஏதாவது ஒரு பொருளின் மேல் கோடுகளால் அல்லது வண்ணத்தால் ஒன்றின் உருவத்தை

# கட்டடக்கலை

திருப்பருத்திக்குன்றத்தில் கி.பி. 6 - ஆம் நூற்றாண்டில் வர்த்தமான மகாவீரருக்கெனக் கோயில் ஒன்று மணற் கல்லினால் கட்டப்பட்டமையால் காலப்போக்கில் சிதைவுறலாயிற்று. எனவே இது சோழர் காலத்தில் கருங்கல்லினால் முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

இங்கு இரண்டு தொகுதிகளாக அடுத்தடுத்து கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. முதல் தொகுதி மகாவீரர், புஷ்பதந்தர், தருமதேவி ஆகியோரது கருவறைகளைக் கொண்டதாகும். இத்தொகுதியைப் பொதுவாகத் திரைலோக்கியநாதர் கோயில் என அழைப்பது வழக்கமாகும். இரண்டாவது தொகுதி பத்மபிரபர், வாசுபூஜ்சியர், பார்சுவநாதர் ஆகிய தீர்த்தங்கரர்களது கருவறைகளை உடையதாகும். இதனைத் "திரிகூடபஸ்தி" என அழைப்பது மரபாகும்.

ஜஜஜஜ

# திரைலோக்கியநாதர் கோயில்

முதல் தொகுதியிலுள்ள மகாவீரர், புஷ்பதந்தர், தரும தேவி ஆகியோரது கருவறைகளுள் காலத்தால் முந்தியது மகாவீரருக்குரியதாகும். பல்லவர்களது காலத்தில் (கி.பி.6 - ஆம் நூற்றாண்டில்) வர்த்தமானேஸ்வரம் என அழைக்கப்பெற்றது இதுவாகும். பின்னர் இது சிதைவுற்றமையால் கி.பி. 11 - ஆம் நூற்றாண்டில் முதலாம் குலோத்துங்கனது ஆட்சியின் போது முற்றிலுமாகப் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. அப்போது இக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், முகமண்டபம் ஆகியவற்றை உடையதாக இருந்திருக்கிறது. கருவறையின் பின்பகுதி அரைவட்ட வடிவமுடையதாய்த் தூங்கானை மாடக் கோயிலாகக் காணப்படுகிறது.

சில காலத்திற்குப் பின்னர் இவற்றுள் கருவறை மட்டிலும் இடிந்தமையால் அதிலிருந்த கற்களை அகற்றிவிட்டு செங்கல்லினால் புதிய கருவறையை முந்தைய பாணியிலேயே அமைத்துள்ளனர். எனவே இன்று கருவறை செங்கல் கட்டடமாகவும், எஞ்சியவை கருங்கல் கட்டடமாகவும் இருப்பதைக் காணலாம்.

கருவறைக்கு முன்பாக உள்ள மண்டபங்களின் அடிப்பகுதி கருங்கல்லினாலும், அதற்கு மேலாக உள்ள பகுதி மணற்கல்லினாலும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த மண்டபங்களிலுள்ள தூண்கள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைய கலைப்பாணியைப் பெற்றிலங்குவதோடு முதலாவது குலோத்துங்க சோழனது கல்வெட்டுகளைக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வர்த்தமானர் கருவறைக்கு வடக்கில் புஷ்பகந்தரது கருவறையும் தெற்கில் தருமதேவிக்கெனச் சிறிய கருவறையும்

கி.பி. 13 - ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றுள் புஷ்பகந்தர் கருவறை செங்கல்லினாலும் யக்ஷி கருவறை கருங்கல்லினாலும் கட்டப்பெற்றவையாகும் இவ்விரண்டும் மகாவீரர் கருவறைக்கு முன்பாக உள்ள மண்டபத்தின் அளவிற்குப் பொருந்தும் வகையில் இணைத்துக் கட்டப்பட்டிருப்பதிலிருந்தே இவை பிற்காலத்தைச் சார்ந்தவை என்பது தெளிவாகிறது.

# திரிகூடபஸ்தி

திரிகூடபஸ்தி என அழைக்கப்பெறும் இரண்டாவது தொகுதியில் பத்மபிரபர், வாசுபூஜ்யர், பார்சுவதேவர் ஆகியோருக்குத் தனித்தனியே கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம் ஆகியவற்றை உடைய கோயில்கள் கி.பி.12 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுப்பப்பட்டிருக்கின்றன. இவற்றுள் பார்சுவ தேவர் கருவறை சிறியதாகவும், மற்றிரு கருவறைகளும் இடைவெளியில் அமைந்ததாகவும் உள்ளது. சில காலத்திற்குப் பின்பு இவையும் பழுதடைந்தமையால் மூன்றாம் குலோத்துங்கனது ஆட்சியில் (கி.பி. 1200) செப்பனிடப்பட்டிருக்கின்றன. இவ்வாறு திருப்பணி செய்யப்பட்ட போது மிகவும் நேர்த்தியாகச் செய்யாமையால் இவற்றின் கட்டட அமைப்புகளில் சிறிது வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம்.

சோழராட்சியின் போது இந்தக் கோயில் தொகுதிகளை உள்ளடக்கியவாறு திருச்சுற்றுமதிலும் இருந்திருக்கிறது. இம்மதிலை ஒட்டி கி.பி. 1234 - ஆம் ஆண்டில் சாந்தி மண்டபமும், தென்கிழக்கு மூலையில் தானியங்களைச் சேமித்து வைக்கும் பொருட்டு கி.பி. 1236 - ஆம் ஆண்டில் மற்றொரு மண்டபமும் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. இவை இரண்டும் மூன்றாம் இராசராசன் காலத்தில் நடந்த திருப்பணியாகும்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு இக்கோயிலைச் சுற்றியிருந்த திருமதிலின் உயரம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இம் மதிலின் கிழக்குப் பகுதியில் மூன்று தளங்கள் உடைய கோபுரமும் கட்டப்பட்டு இருக்கிறது. இந்த திருப்பணிகள் யாவும் கி.பி. 13 - ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சோழருக்கு அடங்கிய காடவ சிற்றரசர்கள் கோப்பெருஞ்சிங்கனால் செய்யப்பட்டவையாகும்.

கி.பி. 1387 - ஆம் ஆண்டில் இந்த இரண்டு தொகுதிக் கோயில்களுக்கும் பொதுவாக அமையும் வகையில் அகலமான மகாமண்டபம் ஒன்று விஜயநகர மன்னன் புக்கனது அமைச்சராகிய இருகப்பா என்பவரால் கட்டப் பெற்றிருக்கிறது. இதனைச் சங்கீத மண்டபம் என அழைப்பர்.

இவ்வாறு திருப்பருத்திக்குன்றத்துக் கோயில்கள் புதிய பாணியில் கட்டப்பெற்றிருப்பதும், அவை செப்பனிடப்பட்டதுவும் சோழர்களது ஆட்சியில்தான் என்பதை அறியமுடிகிறது. இவை பிற்காலத்தில் பலமுறை புதுப்பிக்கப்பட்டிருப்பினும் இவற்றிலுள்ள தூண்கள், கல்வெட்டுகள் முதலியவை சோழர் காலத்தில் செய்யப் பெற்ற திருப்பணிகளை நன்கு அறிவுறுத்துகின்றன. இக்கோயிலுடன் இணைந்திருந்த மடத்தில் ஏராளமான சமணத் துறவிகள் உறைந்து, சமயப்பணி சிறந்தோங்கத் துணை நின்றதுவும் சோழரது ஆட்சிக் காலத்தில் தான். இங்குள்ள கோயில்களுக்கும் மடத்திற்கும் பல்வேறு வகையான தானங்கள் அளித்து அவற்றில் வழிபாடுகளும் பிற சமயப் பணிகளும் தொடர்ந்து குறைவற நடப்பதற்கு மக்களும், அரசு அதிகாரிகளும் அந்தக் காலக் கட்டத்தில் முனைப்புடன் செயல்பட்டிருந்தமையைக் கல்வெட்டுக்கள் பறைசாற்றி நிற்கின்றன.

# கல்விப் பணி

பள்ளி என்பது சமணர் இருப்பிடத்தைக் குறிப்பது சமணப் பள்ளியில் சமணமதத் தொடர்பான கல்வி முதன்முதலில் சொல்லப்பட்டன. இன்றளவும் கல்விச் சாலைக்குப் பள்ளி, பள்ளிக் கூடம் போன்ற பெயர்கள் வழங்கப்பட்டு வருவது சொல்லடிப் படையில் சமணர்களது கொடையே.

ஜைனக் காஞ்சியாகிய திருப்பருத்திக்குன்றத்தில் கி.பி. 6 - ஆம் நூற்றாண்டிலேயே வர்த்தமானர் கோயிலும், அதனுடன் இணைந்த மடமும் இருந்தமையை நாமறிவோம். அப்போது இங்கிருந்த வஜ்ர நந்திக் குரவர் தலைவராகத் திகழ்ந்து கோயில் மடம் ஆகியவற்றின் நிர்வாகத்தைக் கண்காணித்து வந்திருக்கிறார். இங்கு சோழர் காலத்திலும் துறவியர் பலர் வாழ்ந்து அறப்பணி ஆற்றியிருக்கின்றனர்.

கி.பி. 12 - ஆம் நூற்றாண்டில் சந்திரகீர்த்தி என்பார் திருப்பருத்திக்குன்றத்தில் தலைமையகத் தலைவராகத் திகழ்ந்திருக்கின்றார். இவரைக் குலோத்துங்க காடுவெட்டி என்னும் அதிகாரி தமது குருவாகக் கருதி வந்தமையால் இவருக்கும் பிற பட்டாரகர்களுக்கும் பயன்தரும் வகையில் விளை நிலங்களைத் தானமாக அளித்திருக்கிறார். இங்குள்ள கோயிலுக்கும் ரிஷி சமுதாயத்தவருக்கும் தேவைப்படுகிற தண்ணீர் கிடைக்கும் வகையில் கால்வாய் ஒன்றும் வெட்டப்பட்டதாக அறிகிறோம். இத்தலத்தில் வாழ்ந்த துறவியருள் ஆரம்பநந்தி என்பவரும் ஒருவராவர். வர்த்தமானர் கோயிலுக்கு அளிக்கப்பட்ட பள்ளிச்சந்த நிலங்கள் இவரது கண்காணிப்பில் இருந்தவையாக அறிய முடிகிறது. சோழராட்சிக்குப் பின்னரும் இங்குள்ள கோயிலும் மடமும் சிறந்த நிலையிலிருந்து சமய சமுதாய கல்விப் பணிகளைச் செவ்வனே செய்து வந்திருக்கின்றன. இதனுள் ஐந்து அறைகள் உள்ளன. ஒரு அறையில் சுரங்கம் உள்ளது.

6 - ஆம் நூற்றாண்டு முதல் 10 - ஆம் நூற்றாண்டு வரை ஜீனக்காஞ்சி என்ற இடத்தில் சமணப் பல்கலைக் கழகமே இருந்துள்ளது. இதனை கீழ்க்கண்ட ஜைன ஆசாரியர்கள் தலைமை ஏற்று நடத்தி வந்துள்ளனர்.

1. வஜ்ர ஆசாரியர்
2. சம்மந்த பத்ர ஆசாரியர்
3. சிவகோட்டி ஆசாரியர்
4. பூஜ்ய பாத ஆசாரியர்
5. அகளங்க ஆசாரியர்
6. நிட்களங்க ஆசாரியர்
7. அனந்த வீர்யவாமன ஆசாரியர்
8. சந்திரகீர்த்தி ஆசாரியர்
9. புஷ்ப சேன ஆசாரியர்
10. மல்லிசேன வாமன ஆசாரியர் (மேல்மந்திர புராணம்)

மல்லிசேன வாமன ஆசாரியர் திருப்பருத்திக்குன்றத்தில் ஜைனசங்கத்தை தலைமையேற்று நடத்தியவர்.

குராமரத்தின் கீழ் உள்ள கல்வெட்டு மூலம் நூல் மற்றும் நூலாசிரியர் விபரங்களை அறியலாம்.

1. மல்லிஅநன வாமன - மேருமந்திர புராண ஆசிரியர்
2. புஷ்பசேனா மல்லிசேன ஆசாரியரின் மாணவர் முனிபுங்கவன்
3. அனந்த வீர்யவாமன - சந்திரகீர்த்தி ஆசாரியர் மாணவர் (கோட்டையூர் ஆசாரியர்)

மேலும் இவ்வாலயத்தில் உள்ள இவரது பாதமும், அதன் அடியில் உள்ள கல்வெட்டு மூலமாகவும், மேருமந்திரபுராண ஆசிரியர் வாமன முனிவரின் சீடர் புஷ்பசேனமுனிவர் என்பதை அறியலாம். ஆசாரியவாமனர் பிராகிருதம், சமஸ்கிருதம், தமிழ் மொழிகளில் புலமை பெற்றவராக விளங்கியுள்ளார். இதைப் போன்ற கல்வெட்டும் பாத அடிகளும் தரக் கோயில் தேசூர் அருகிலுள்ள மலையிலும் காணப்படுகிறது. எனவே இவர் தமிழ்நாடு முழுவதும் சென்று வந்துள்ளமை தெரிகிறது.

வாமன ஆசாரியர் வாழ்ந்த காலம் கி.பி. 1382 எனலாம். 14 - ஆம் நூற்றாண்டில் விஜயநகர மன்னான ஹரிஹரன் அவனது படைதளபதியான இருகப்பன், புஷ்பசேன ஆசாரியிடம் பயின்றவன் ஆவான்.

## பள்ளிச் சந்த நிலங்கள்

சமண சமயக் கோயில்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் பள்ளிச்சந்தம் என அழைக்கப்பெறும். இக்கோயிலுக்கு பள்ளிச்சந்தமாக கொடுக்கப்பட்ட செய்திகளை இக்கல்வெட்டின் மூலம் அறிகிறோம்.

கி.பி. 6 - ஆம் நூற்றாண்டில் சிம்மவிஷ்ணு பல்லவனது ஆட்சியில் திருப்பருத்திக்குன்றக் கோயிலின் வழிபாட்டுச் செலவிற்கென பெருநகர நாட்டிலுள்ள அமண்சேர்க்கை என்னும் ஊரும் தாமலில் உள்ள சில நிலங்களும் பள்ளிச்சந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிலங்கள் வஜ்ரநந்திக் குரவர் என்னும் சமணப் பெரியோரது பொறுப்பிலிருந்தன. இச்செய்திகள் அனைத்தும் பள்ளங்கோயில் செப்பேடு என்னும் பல்லவர் காலச் சாசனத்தில் காணலாம். பள்ளிச்சந்த நிலத்தைப் பற்றிய குறிப்பினையுடைய முதல் செப்பேடு இதுவேயாகும்.

திருப்பருத்திக்குன்றக் கோயிலுக்குச் சோழர் காலத்திலும் விசயநகர மன்னர் காலத்திலும் பல தானங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. தற்போதுள்ள வர்த்தமானர் கோயில் சோழர்காலக் கலைப்பாணியைக் கொண்டுள்ளதேயன்றி பல்லவர் காலக் கட்டிட கலையம்சங்களைக் கொண்டு விளங்க வில்லை. இக்கோயிலுக்கு மூன்றாம் குலோத்துங்கன் அம்பி என்னும் ஊரில் 20 வேலி

நிலத்தை பள்ளிச்சந்தமாக அளித்துள்ளான். இங்கு குறிப்பிட்டுள்ள அம்பி என்னும் ஊர் காஞ்சிபுரத்திற்கு வடமேற்கில் இரண்டு கல் தொலைவில் உள்ளது. இவ்வூரின் மேற்குப் பகுதி மேலம்பி எனவும் கிழக்கு பகுதி கீழம்பி எனவும் இப்போதும் வழக்கத்தில் உள்ளது. விசயநகர மன்னாகிய இரண்டாவது புக்கரது (1404 - 06) காலத்தில் அவரது அமைச்சர் இருகப்பா என்பவன் இக்கோயிலின் மண்டபங்களைக் கட்டியதோடு மட்டுமின்றி மாமண்டூரின் ஒரு பிரிவாகிய மகேந்திர மங்கலம் என்னும் ஊரையும் வழங்கியுள்ளார்.

## பொன் பணம்

சமண சமயக் கோயில்களுக்குப் பள்ளிச்சந்தமாக நிலங்கள் மட்டுமின்றி பொன்னும், பணமும் வழங்கப்பட்டுள்ளன. இவை கோயிலின் வழிபாட்டுச் செலவிற்கும் கோயிலிலிருந்த சமண முனிவர்களுக்கும் ஆங்கு வந்து செல்லும் சமண அறவோர்களுக்கும் உணவளிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன.

# சமுதாயப் பணி

திருப்பருத்திக்குன்றத்தில் காஞ்சி மாநகரைச் சார்ந்த செங்கதிர்ச் செல்வன் என்னும் வணிகன் இங்குள்ள கோயிலுக்குப் பயன்படும் வகையில் கிணறு ஒன்றை வெட்டியிருக்கின்றான்.

சமண சமயம் பண்டைக் காலத்திலிருந்தே கோயில்கள், மடங்கள் போன்ற சமய அமைப்புகளின் வழியாக மக்கள் சமுதாயம் நேரடியாகப் பயனடையும் வகையில் சமுதாயப் பணிகள் பல செய்து வந்திருப்பதைக் காணலாம். இச்சமயத்தவர் உணவளித்தல், மருத்துவ வசதி செய்தல், அடைக்கலம் கொடுத்தல், கல்வியறிவை வளர்த்தல் ஆகிய உதவிகளைப் பெரிதும் போற்றி செய்துள்ளனர்.

# கோயிற் சிற்பங்கள்

## *சிற்பக்கலை (அ) படிமங்கள்*

திருப்பருத்திக்குன்றத்திலுள்ள கட்டடக் கோயில்களில் விமானத்தின் கோட்டங்களிலும் திருச்சுற்றுகளிலும் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. திருப்பருத்திக்குன்றம் கோயில் சிகரத்தின் கீழுள்ள கோட்டங்களில் அமர்ந்த நிலையிலுள்ள மகாவீரர் சிற்பங்கள் சிறியவையாக உள்ளன.

இக்கோயிலில் ஏராளமான படிவங்கள் இன்றளவும் வழிபாட்டில் உள்ளதைக் காணலாம். அவை பிரம்மயக்ஷர், பத்மாவதி, சர்வாகனா, தரனேந்திரர், தர்மதேவி, மாதாங்கா, வர்த்தமானர், சித்தாயினி, சுவாலமாலினி, சரஸ்வதி, பாகுபலி, அனந்தநாதர் ஆகும். பார்சுவநாதர் படிவம் பத்ம பீடத்தில் நின்ற வண்ணம் ஆடையின்றித் திகழ்கிறது. இவரது தலைக்கு மேற்பகுதியில் படம் விரித்தநிலையில் பாம்பு காணப்படுகிறது. பத்மாவதி, யக்ஷி நான்குகைகளையுடையவளாய் அவற்றில் அங்குசம், பாசம், பழம், மலர் ஆகியவற்றைக் கொண்டுள்ளாள். இவளது தலைமையிலுள்ள மகுடத்தின் முற்பகுதியில் தீர்த்தங்கரரின் உருவம் சிறிய அளவில் பொறிக்கப்பட்டுள்ளது. இம்மகுடத்திற்கு மேலாக ஐந்து தலை நாகம் அழகுற படம் விரித்த வண்ணம் காணப்படுகிறது. பன்னிருகைகளுடைய சித்தாயினி யக்ஷி அவற்றில் சங்கு, சக்கரம், பாசம், வில், மலர், அக்கமாலை, சுவடி முதலியவற்றைப் பெற்றுள்ளாள். இவளது திருமேனியினை மகுடம், குண்டலங்கள், கேயூரம், அட்டிகை முதலிய அணிகலன்கள் அலங்கரிக்கின்றன. இச்செப்புத் திருமேனி அமைப்பினில் துர்க்கையினை ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சுவாலாமாலினியம்மன் எட்டு திருக்கைகளை உடையவளாய் எருதுவாகனத்தின் மீது வைக்கப்பட்டுள்ள பீடத்தில் வீற்றிருக்கிறாள். இவளது கைகள் சங்கு, சக்கரம், அம்பு, வில், வாள், கேடயம் முதலிய படைக்கலன்களையும், அபய, வரத

முத்திரைகளைப் பெற்றும் விளங்குகின்றன. தலையிலுள்ள கிரீட மகுடத்தின் முற்பகுதியில் சந்திரபிரபா தீர்த்தங்கரரது சிறிய உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

கிரீடமகுடத்தின் இருமருங்கிலும் உள்ள சுவால கேசங்கள் கடைவாயினின்றும் வெளிவந்துள்ள கோரைப்பற்கள் முதலிய அமைப்புகள் இந்து சமயத்திலுள்ள காளியின் படிமங்களிலுள்ளவை போன்றுள்ளன. அனந்தநாதர் பாகுபலியின் கால்களையும் கைகளையும் சுற்றி இலைகளுடன் கூடிய கொடி அமைப்பினைக் காணலாம். இம்மூன்று தீர்த்தங்கரர் படிமங்களின் மார்பில் இடது புறம் முக்கோண வடிவமான "ஸ்ரீ வத்ஸம்" பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

திருப்பருத்திக்குன்றத்திலுள்ள படிமங்களுள் அழகு வாய்ந்தது தர்மதேவியின் செப்புத் திருமேனியே ஆகும். இருகைகளுடைய இத்தேவியின் வலது கை மலர் ஒன்றைப் பெற்றும் இடதுகை தொங்கவிடப்பட்டும் உள்ளன. இவளது திருமேனியில் அழகிய மகுடம், கேயூரங்கள், மகாகுண்டலங்கள், அட்டிகைகள் முதலிய பல்வேறு அணிகள் காணப்படுகின்றன. சற்று புன்னகை பூத்த முகமும், பருத்துத் திரண்ட மார்பகமும், ஒடுங்கிய இடையும், தசை மடிப்பினையுடைய வயிற்றுப் பகுதியும், இப்படிமத்திற்கு உயிரூட்டுவனவாகத் திகழ்கின்றன. இவள் நிற்கும் பீடத்தின் முன் பகுதியில் சிங்கவாகனம் சிறியதாக வடிக்கப்பட்டுள்ளது.

## அய்யனார்

அய்யனார், சாஸ்தா, அரிகரபுத்திரன் எனும் பெயர்களை உடைய ஊர் தெய்வமாக இப்போது இந்துக்களால் வணங்கப்படுகின்றது. சமணர்களுடைய கோயில்களில் இத்தெய்வத்தை இன்றும் காணலாம். பரிவாரத் தெய்வங்களில் ஒன்றாக சமணர் இதனை இன்றும் வணங்குகின்றனர். இத்தெய்வத்திற்கு "பிரம்ம யட்சன்", "சாத்தனார்" முதலிய பெயர்களை அவர்கள் கூறுகின்றனர். முதன் முதலாக ஜீனக்காஞ்சியில் உள்ள திருப்பருத்திக்குன்றத்துச் சமணக் கோயிலில் தான் அய்யனார் சிலை காணப்படுகின்றது. இதேபோல்

ஏனைய இடங்களில் உள்ள சமணக் கோயிலிலும் இச்சிலையை காணமுடிகிறது. இது சமணர்களிடமிருந்து இந்துக்கள் பெற்றுக் கொண்ட சிறு தெய்வங்களில் ஒன்றாகும். இவை சமணராக இருந்து இந்துக்களாக மாறிய "ஆருகதர்களால்" இது இந்து மதத்தில் புகுத்தப்பட்டிருக்க வேண்டும்.

பௌத்த மதத்திலிருந்தும் சமண மதத்திலிருந்தும் அய்யனாரை (சாஸ்தாவை) இந்துக்கள் ஏற்றுக் கொண்டனர். பௌத்த அய்யனாருக்கும், சமண அய்யனாருக்கும் உள்ள வேற்றுமை யாதெனில் பௌத்த அய்யனாருக்கு வாகனம் குதிரை, சமண அய்யனாருக்கு வாகனம் யானை என்பதே ஆகும்.

ஐஐஐ

# சமண(ஜைன) அறவோர்கள் இயற்றியருளிய தமிழ் நூல்கள்

## இலக்கியம்

1. பேரகத்தியம்
2. தொல்காப்பியம்
3. திருக்குறள்
4. சிலப்பதிகாரம்
5. சீவக சிந்தாமணி
6. நரிவிருத்தம்
7. சூளாமணி
8. பெருங்கதை
9. வளையாபதி
10. மேருமந்திரபுராணம்
11. நாரதர் சரிதம்
12. சாந்திபுராணம்
13. உதயணகுமார விஜயம்
14. நாககுமாரகாவியம்
15. கலிங்கத்துப்பரணி
16. யசோதர காவியம்
17. இராமகாதை
18. கிளிவிருத்தம்
19. எலிவிருத்தம்
20. இளந்திரையம்
21. புராணசாகரம்
22. அமர்தபதி
23. மல்லிநாதர் புராணம்
24. வாமனசரிதை
25. பிங்கலசரிதை
26. வர்த்தமானம்

## இலக்கணம்

1. நன்னூல்
2. நம்பியகப்பொருள்

3. யாப்பருங்கலம்
4. யாப்பருங்கலக்காரிகை
5. நேமிநாதம்
6. அவிநயம்
7. வெண்பாப்பாட்டியல்
8. சந்தநூல்
9. இந்திர காணியம்
10. அணியியல்
11. வாய்ப்பியம்
12. மொழிவரி
13. கடிய நன்னியம்
14. காக்கைப் பாடினியம்
15. சங்க யாப்பு
16. செய்யுளியல்
17. நக்கீரர் அடிநூல்
18. கைக்கிளைச் சூத்திரம்
19. நத்தத்தம்
20. தக்காணியம்

## நீதி நூல்கள்

1. நாலடியார்
2. பழமொழி நானூறு

3. ஏலாதி
4. சிறுபஞ்சமூலம்
5. திணைமாலை நூற்றைம்பது
6. ஆசாரக்கோவை
7. அறநெறிச்சாரம்
8. அருங்கலச் செப்பு
9. ஜிவசம் போதனை
10. ஔவை (அகத்தியல்குடி)
11. நான்மணிக்கடிகை
12. இன்னாநாற்பது
13. இனியவைநாற்பது
14. திரிகடுகம்

தர்க்க நூல்கள்

1. நீலகேசி
2. பிங்கலகேசி
3. அஞ்சனகேசி
4. தத்துவதரிசனம்
5. தத்துவார்த்த சூத்கை (தமிழ்)

இசை நூல்கள்

1. பெருங்குருகு
2. பெருநாரை

3. சேயிற்றியம்
4. பரதசேனாபதியம்
5. சயந்தம்
6. இசைத்தமிழ் செய்யுட்கோவை
7. இசைநுணுக்கம்
8. சிற்றிசை
9. பேரிசை

## நாடக நூல்கள்

1. குணநூல்
2. அகத்தியம்
3. கூத்தநூல் சந்தம்

## ஓவிய நூல்கள்

1. ஓவிய நூல்
2. கலைக்கோட்டு தண்டம்
   (நிகண்டனார் இயற்றியது)

## நிகண்டுகள்

1. சூடாமணி நிகண்டு
2. திவாகரம்
3. பிங்கலந்தை நிகண்டு

## கணித நூல்கள்

1. கெட்டி எண் சுவடி
2. கணக்கதிகாரம்

3. நல்லிலக்க வாய்ப்பாடு
4. சிறுகுழி வாய்ப்பாடு
5. கீழ்வாய் இலக்கம்
6. பெருக்கல் வாய்ப்பாடு
7. அவினந்த மாலை

சோதிட நூல்கள்

1. ஜினேந்திர மாலை
2. உள்ளமுடையான்

பிரபந்தங்கள்

1. தோத்திரத்திரட்டு
2. திருக்கலம்பகம்
3. திருநூற்றந்தாதி
4. திருவெம்பாவை
5. திருப்பாமாலை
6. திருப்புகழ்
7. ஆதிநாதர் பிள்ளைத்தமிழ்
8. இப்பண்டைநாதர் உலா
9. திருமேற்றிசையந்தாதி
10. தர்மதேவியந்தாதி
11. திருநாதர்குன்றத்துப் பத்தும் பதிகம்

சதகம்

1. கொங்கு மண்டல சதகம்
2. நேமிநாதம் சதகம்

# தீர்த்தங்கரர்கள்

| வ. எண் | தீர்த்தங்கரர் | வாகனம் (அ) சின்னம் | யக்ஷன் | யக்ஷி |
|---|---|---|---|---|
| 1. | ரிஷ்பநாதர் | எருது | கோமுக யக்ஷன் | சக்ரேஸ்வரி |
| 2. | அஜிதநாதர் | யானை | மகா யக்ஷன் | ரோகினி |
| 3. | சம்பவநாதர் | குதிரை | திரிமுக யக்ஷன் | ப்ரக்ஞப்தி |
| 4. | அபிநந்தநாதர் | குரங்கு | யக்ஷேஸ் வரன் | வஜ்ர சிரிங்கலா |
| 5. | சுமதிநாதர் | சக்ரவாகம் | தும்புரு | புருஷதத்தா |
| 6. | பத்மபிரபா | தாமரைமலர் | குசுமா | மனோவேகி |
| 7. | சுபார்சுவநாதர் | சுவஸ்திகம் | வரநந்தி | காளி |
| 8. | சந்திரபிரபா | இளம்பிறை | விஜயா | சுவாலா மாலினி |
| 9. | புஷ்பதந்தர் | முதலை | அஜிதா | மகாகாள |
| 10. | சீதளநாதர் | அசோதகமரம் | பிரம்ம யக்ஷன் | மாநவி |
| 11. | ஸ்ரேயம்சுநாதர் | காண்டா மிருகம் | ஈஸ்வர யக்ஷன் | கௌரி |
| 12. | வாசுபூஜ்யம் | எருமை | குமார யக்ஷன் | காந்தாரி |

| வ. எண் | தீர்த்தங்கரர் | வாகனம் (அ) சின்னம் | யக்ஷன் | யக்ஷி |
|---|---|---|---|---|
| 13. | விமலநாதர் | வராகம் | சதுர்முகன் | வைரோ டினி |
| 14. | அனந்தநாதர் | குரடி | பாதாள யக்ஷன் | அனந்தமதி |
| 15. | தர்மநாதர் | வஜ்ரதண்டம் | கின்னர யக்ஷன் | மாநஸி |
| 16. | சாந்திநாதர் | மான் | கருட யக்ஷன் | மகாமாநசி |
| 17. | குந்துநாதர் | ஆடு | காந்தர்வ யக்ஷன் | ஜெயா |
| 18. | அரநாதர் | மீன் | மகேந்திர யக்ஷன் | விஜயா |
| 19. | மல்லிநாதர் | கலசம் | குபேரன் | அபிராஜிதா |
| 20. | முனிசுவிரதர் | ஆமை | புருஷவரர் | பகுரூபினி |
| 21. | நமிநாதர் | நீலதாமரை | வித்யுத்ப்வ | சாமுண்டி |
| 22. | நேமிநாதர் | சங்கு | சர்வான யக்ஷன் | கூஷ் மாண்டிஷ |
| 23. | பார்சுவநாதர் | பாம்பு | தரணேந் திரன் | பத்மாவதி |
| 24. | மகாவீரர் | சிங்கம் | மாதாங்கா | சித்தாயிகா |

# முடிவுரை

திரிபுவன மல்ல பிஜ்ஜன (கி.பி. 1156 - 67) என்னும் கனசசூரி வம்சத்து அரசர் சமணராக இருந்து சமணக் கொள்கைகளைப் பரப்பி வந்தார். கருநாடகத்தில் ஆண்ட இம்மன்னனது சமணக் கொள்கைகளை அவரது ஆட்சியில் அமைச்சராக் இருந்த வீரசைவத்தின் குரலாக விளங்கிய பசவண்ணர் எதிர்த்தார். பின்னர் அரசரையே வீரசைவர்கள் கொன்றனர் என்கின்றனர். இக்காலகட்டத்தில் சமணம் தமிழ்நாட்டின் சோழமண்டலத்தை உள்ளடக்கிய பல பகுதிகளில் பரவியது. போசளர் அரசாட்சியிலும் சமணம் தமிழ் நாட்டில் குறிப்பாகத் தொண்டைமண்டலத்தில் பரவியுள்ளது. போசளர் மைசூர்ப் பகுதியில் அரசாண்டிருந்தாலும் அவர்களால் சமணம் தொண்டை நாட்டின் பல பகுதிகளில் பரப்பப்பட்டது. போசளர்கள் சமணத்தில் உறுதியான பிடிப்புள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள்.

பிற்காலத்தில் புத்தமதத்திற்கு காஞ்சிபுரத்தில் கிடைத்த ஆதரவைக் காட்டிலும் மிகுதியாக சமணமதத்திற்குக் கிடைத்துள்ளது, என்றாலும் களச்சூரிய பேரரசு அழிந்தபின் சமணத்திற்கான ஆதரவு காஞ்சிபுரத்தில் குறைந்துவிட்டது. சைவத்தின் எழுச்சி புத்தமதத்தின் தாக்கம் போன்றவற்றால் சமணத்தின் வளர்ச்சியின் வேகம் குறைந்ததாக இருந்தாலும் சமணம் இம்மண்ணை விட்டு முற்றிலுமாக அகலாமல் தன்னைக் காத்துவந்துள்ளது.

தமிழ்நாட்டில் பக்தி இயக்கம் - சமயக்குரவர் நால்வரால் ஏற்படுத்தப்பட்டது. கருநாடகத்தில் வீரசைவம் பசவண்ணர், வைணவர் இராமானுஜர், போன்றோரின் எழுச்சிகளாலும் சமணத்தின் வேகம் குறைந்துள்ளது.

# பார்வை நூல்கள்


1. சமணமும் தமிழும் - மயிலை சீனி. வேங்கடசாமி
2. காஞ்சி மாநகர் - வித்துவான் நாராயண வேலுப்பிள்ளை
3. மேருமந்தர புராணம்
4. காஞ்சிப் புராணம்
5. தேவாரம்
6. பெரியபுராணம்
7. மணிமேகலை
8. தொல்காப்பியம்
9. நன்னூல்
10. திருக்குறள்
11. கல்வெட்டியல் - ஏகாம்பரநாதன்
12. சமண அறமும் அறிவியலும் - ஜைனர் சங்கம் வெளியீடு
13. சோழர்காலத்து சமயப் பணிகள் - ஏகாம்பரநாதன்
14. காஞ்சிபுரம் மாவட்ட வரலாறு - திருஞானசம்பந்தம்
15. தமிழகத்தில் ஜைனம் - ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால்
16. பல்லவர் செப்பேடு பத்து
17. Tiruparuttikkunram and its Temple - T. N. Ramachandran
18. Jaina Inscription of Tamilnadu - Ekambaranathan
19. Jainism in South India and Jaina Epigraphs - P. B. Desai

20. Jaina Literature in Tamil - A. Chakravarthi

21. South Indian Inscription Volume - V

22. Epigraphia Indica Volume - VII Page 115

23. Indian Archaeology Review - 1954 to 1987

24. Annual Report Epigraphs (A.R.E) - 1923, 1928-29

25. History of Tamils - P.T. Srinivasa Iyengar

26. மனோரமா இயர் புக் (2004)

27. செங்கம் நடுகற்கள் - இரா. நாகசாமி

28. மாமல்லை - இரா. நாகசாமி

# பிற்சேர்க்கை - I

1. *ஸ்வஸ்திஸ்ரீ* [॥*] *ஙராஜராஜதெவஙற்கு* யாண்டு ௨௰ ஆ
2. வது தியாகச்முத்திரப்பட்டையார்க்கு அ
3. டைக்காயமிது இடுகிற பிராமண ந் விமவ
4. டுகன் நெந்மலி மகத்தல எத்த கடமை இ
5. ந்த நாயனார்க்கு திருப்பள்ளி எழுச்சித் திருவ
6. மிதுக்கு விட்டான் இந்த நெல்லிட்டு இந்த மண்
7. ட்பஞ் செயவித்தான் [॥*]
8. *ஸ்வஸ்தி ஸ்ரீ* [॥*] திருப்பருத்திக்குன்றில் நாயனார் செம்பொற்குன்றாழ்வார் பள்ளிச்சஞம் காலியூர்க்கொட்டத்து விற்பெட்டுநாட்டு காண்ணிபாக்க
9. ம் நெடுநாள் செல்லாதெ கிடாந்த கிடந்தவிதனைத் தியாகசமுத்திரப்பட்டையாரான விமரைசர் *ஙராஜராஜ* தெவஙற்கு யாண்டு பதினெட்டாவ
10. து முதல் இஞ நாயனார்க்குப் பள்ளிச்சஞமாக விட்டார் காண்ணிபாக்கம் விமரைசர் *யஓுஓ* [॥*]

# பிற்சேர்க்கை - II

## பல்லவமன்னன் சிம்மவர்மனின் பள்ளன்கோவில் செப்பேடுகள்

கோ விசைய *ஸிம்ஹவர்ம*ற்கு[1] யாண்டாறாவது வெண்குன்றக் கோட்டத்துப் பெருநகர நாட்டு நாட்டார் காண்க தந்நாட்டு அமண் சேர்க்கை பருத்திக் குன்றில் *வஜ்ரநந்தி*க்குரவர்க்குப்[2] பள்ளிசந்தமாகக் கொடுத்தோந் தாங்களும் படாகை நடந்து கல் லுங் கள்ளியுந் நாட்டி அறையோலை செய்து கொ[3]

டுத்து விடுதகவென்று நாட்டார்க்குத் திருமுகம் விட நாட்டாருந் திருமுகம் கண்டு தொழுது தலைக்கு வைத்து படாகை நட[ந்]து கல்லுங் கள்ளியுந் நாட்டி நாட்டார் விடுத்த அறையோலைப்படிக் கெல்லை கீழ்பாலெல்லை ஏந்தலேரியின் கீழைக் கடற்றின் மேற்கு மோமைக் கொல்லை எல்லை இன்னும் தென்பாலெல்லை வேள்வடுகள் கேணியின் வடக்கும் கடற்றினெல்லை இன்னுந் கீலபாடி

எல்லை இன்னும் விலாடன் குற்றேத்தத் தெல்லை இன்னும் மேல்பாலெல்லை மாவேத்தத்து வதியின் கிழக்கும் வடபாலெல்லை பெருங்கொல்லையின் தெற்கு இன்னும் பாண்டியன் கயத்தொல்லை இன்னும் முருக்கஞ்கேணி எல்லை இவ்விசைத்த பெருநான்கெல்லை யகத்துமகப்பட்ட நிலம் நீர் நிலமும்

புன்செய்யும் களரும் கன்று மேய் பாழும் காடும் பீடிலிகையும் கிடக்குரு கேணியும் மனையும் மனைப்படப்பும் உடும்போடி ஆமை தவழ்ந்ததெல்லாம் உண்ணில் னொழிவின்றி கோவும் பொறியும் மாற்றி குடிநீக்கி இவ்வூர் பெற்ற *வஜ்ரநந்தி* க்குரவர்க்கே பள்ளிச்சந்தமாக தாமரிலும் பதினாறரைப்பட்டி நிலங்கொடுத்தோம் இந்நிலத்திற் கெல்லை கீழ் பாலெ

ல்லை புலிகிழார் பட்டியின் மேற்கும் தென்பாலெல்லை முள்ளெறி [பாக்க]த் தெல்லையின் வடக்கும் மேலபாலெல்லை போக்குவாய்ச் செறுவின் கிழக்கும் வடபாலெல்லை பல்லாங்குழிக் காவின் தெற்கும் இந்நான்கெல்லை யகத்தும் அக[ப*]பட்ட *பூமியும்*[4] பருத்திக்குன்றில் *வஜ்ரநந்தி*க்குரவர்க்கே[2] பள்ளிச்சந்த மாக *பரதத்தி*[5] சென்றது *நரபய*னாணத்தியால்[6] |*ஸ்ரீ*||

---

1. ஸிம்ஹவர்மர்க்கு
2. வஜ்ரநந்திக்குரவர்க்கு
3. செப்பேட்டின் ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு பத்தியாக உள்ளது
4. பூமியும்
5. பரதத்தி
6. நரபயனாணத்தியால்

# விளக்க உரை

## பள்ளம்கோயில் செப்பேடு

தமிழ்நாட்டில் இதுவரை கிடைத்துள்ள செப்பேடுகளில் தமிழில் அரச ஆணையை கொண்டுள்ள மிகவும் தொன்மையான செப்பேடு இதுவேயாகும். தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம் பள்ளன் கோயில் என்ற இடத்தில் இச்செப்பேடு கிடைத்தது. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனுடைய பாட்டன் சிம்மவர்மனின் ஆணையை இச்செப்பேடு கூறுகிறது. இது இரண்டு பகுதிகளைக் கொண்டது. இதில் முதல் பகுதி சம்ஸ்கிருதத்திலும், இரண்டாம் பகுதி தமிழிலும் உள்ளன.

சிம்மவர்மனின் மகனும் மகேந்திரனின் தந்தையுமாகிய சிம்மவிஷ்ணு பல்லவர் ஆட்சியை காவிரிக்கரை வரையில் விரித்ததை இச்செப்பேட்டின் சம்ஸ்கிருதப் பகுதி கூறுகிறது. மேலும் திருப்பருத்திக்குன்றில் வாழ்ந்த நந்திசங்கத்தைச் சார்ந்த வஜ்ஜிரநந்தி என்ற சமணப்பெரியாருக்கு ஒரு ஊரை பள்ளிச்சந்தமாகக் கொடுத்ததை சம்ஸ்கிருதப் பகுதி கூறுகிறது.

அதே ஆணை சற்று விரிவாக தமிழ்ப் பகுதியிலும் குறிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் தமிழ்ப் பகுதி மட்டும் இடம் பெற்றுள்ளது.

செப்பேட்டின் காலம் சற்றேறக் குறைய கி.பி. 550 ஆகும்.


இச்செப்பேட்டிலிருந்து கி.பி. 6-ம் நூற்றாண்டிலேயே அரச ஆணை எவ்வாறு அளிக்கப்பட்டது என்றும் அதை எவ்வாறு ஊரார் பெற்று அதன்படி நடந்தனர் என்றும் அறியலாம். கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலேயே எவ்வளவு தெளிவாக ஆட்சி தமிழில் செயல்பட்டது என்பதற்கும் இச்செப்பேடு எடுத்துக்காட்டாகும்.

"பெருநகர நாட்டு நாட்டார் காண்க" என்பது அரச ஆணை. ஆணை எழுதப்பட்டு அனுப்பப்பட்ட ஓலைக்கு திருமுகம் என்று


பெயர். தானம் கொடுக்கப்பட்ட நிலத்திற்கு எல்லைகள் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, என கிழக்கே தொடங்கி வலமாக குறிக்கப்படுவது தொன்றுதொட்டு வரும் மரபு. தானம் கொடுக்கப்பட்ட நிலத்தில் எவை எவை உட்பட்டன என்பதை "நான்கு எல்லையனைத்தும் அகப்பட்ட நிலம், நீர்நிலமும், புன் செய்யும், களரும், கன்றுகள் வாழும் காடும், பீடிலிகையும், கிடங்கும், கேணியும், மனையும், மனைப்படைப்பும், உடும்போடி ஆமை தவழ்ந்ததெல்லாம் உள் நிலம் ஒழிவின்றி" என்று வருவதிலிருந்து அறியலாம். இவ்வாறு கொடுக்கப்படும் நிலத்துக்கு அரசனுக்குச் சேரவேண்டிய வரியையும் நிலவகைப் பெயரையும் மாற்றிக் கொடுக்கப்பட்டது என (கோவும் பொறியும் மாற்றி) அறிகிறோம். உழும் குடிகளை சிலசமயம் அகற்றிவிட்டு நிலத்தை கொடுப்பவர்க்கு முழு உடைமையாக கொடுப்பது மரபு. இதை "குடிநீக்கி" என்ற சொல்லால் குறிப்பர். உழும் குடிகளை நீக்காமலேயே நிலத்தை கொடுப்பதும் உண்டு. அதை "குடிநீங்கா" என்ற சொல்லால் குறிப்பது உண்டு. இச்செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிலம் குடிநீக்கிய பள்ளிச்சந்தம். "பள்ளிச்சந்தமாக" என்பது அரச ஆணை. தாமர் என்ற ஊரிலும் பதினாறரைப் பட்டி நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டது. நரபயன் என்ற அதிகாரி இவ்வாணையை ஒழுக்குபவனாக (செயலாற்றுபவனாக) குறிக்கப்படுகிறான். அவனை முற்கொண்டு இத்தானம் (பரதத்தி-பிறருக்கு கொடுக்கப்படுவது) அளிக்கப்பட்டது.


ஜஜஜஜ

# நிழற்படங்கள்





திரைலோக்கியநாதர் கோயில்






ஓவியங்கள்







சமவசரணம்




தீர்த்தங்கரர்






பார்சுவநாதர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு



சந்திரபிரபா கோயில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



# தமிழ்நாடு அரசு
# தொல்லியல் துறை

கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடுகளில் இத்துறையால் நூலாக வெளிக்கொணர்ந்த நூல்களின் பட்டியல்

1. திருவையாறு
2. திருவெள்ளறை
3. திருப்பரங்குன்றம்
4. திருப்பத்தூர்
5. திருமழபாடி
6. ஜம்பை
7. திருநாவலூர்
8. வேதாரண்யம்
9. கொழுமம் - குமரலிங்கம்
10. ஸ்ரீவில்லிபுத்தூர்
11. அழகர்கோயில்
12. திருச்செந்துறை
13. திருக்கழுக்குன்றம்
14. குடுமியான்மலை
15. மேல்பாடி
16. காப்பலூர்
17. திருமாணிகுழி
18. திருமால்புரம்
19. திருத்தணி
20. விஜயமங்கலம்
21. திருநாகேஸ்வரம்
22. திருப்பாலைவனம்
23. இராமேஸ்வரம்
24. திருப்பருத்திக்குன்றம்
25. புள்ளமங்கை
26. திருமுக்கூடல்